Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

3 MAY 1972 UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

வார மலர்




மலர் 14 | ரபி. அவ் 15 | சித்திரை 18 | ஞாயிற்றுக்கிழமை | (30-4-72) | இதழ் 80

# நாளை முதல் தவறணைகளில் மட்டுமே கள் விற்கலாம்

## மீறினால் குற்றம்; வாடிக்கையாளருக்கும் சீவல் தொழிலாளருக்கும் வசதிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுமார் முப்பது வருடங்களுக்குமேலாக யாழ் நாவலர் ... தூண்முடுக்குகளிலெல்லாம் காட்சியளித்துக் கொண்டிருந்த கள்ளுக்கொட்டில்கள் இன்றுடன் பிரியாவிடைபெறுகின்றன. நாளைமுதல் தவறணைகள் காட்சியளிக்கின்றன.

நாளைமுதல் யாழ். மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் இருநூறு தவறணைகளில் நாளைமுதல் கள்ளு விற்கப்படும். சீவல் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இருபத்தியொன்று கள்ளு உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் இத் தவறணைகளை நடாத்தவிருக்கின்றன.

தவறணைகள் கட்டுவதற்கும், கள் இறக்குவதற்கும் வேலைகள் தொடங்கும்வரை சீவல் தொழிலாளருக்குச் செலவு வழங்கவும், தவறணைகளுக்குத் தேவையான தளபாடங்கள் உபகரணங்களுக்கும் முதல் சில தினங்களுக்கு சீவல் தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கவும் ... கடன் வழங்கியிருக்கிறது. பங்கீட்டுப்பொருள்களை இவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனுக்குப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளுத்தவறணைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்கப்பட வேண்டும் என்றும் சிலசங்கங்கள் வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்யும்பொருட்டு அவர்கள் தங்கியிருந்து ஆறுதலாகக் கள்ளு அருந்துவதற்கு கதிரை மேசை வசதியுடன் இசைவிருந்தளிப்பதற்கும் ஏற்கனவே ஏற்பாடுசெய்துள்ளனவென்றும் தெரிவிக்கப்படுகிறது.

### குற்றம்

நாளைமுதல் உத்தரவு பெற்ற தவறணைகளில் அல்லாமல் வேறு இடங்களில் கள்ளு விற்பது குற்றமாகும். தவறணை முறை வெற்றியளித்தால் சீவல் தொழிலாளருக்குமட்டுமல்ல வடக்கின் பொருளாதாரத்துக்கும் நல்ல மாறுதல் ஏற்படும் என்றும் இதை வெற்றிகரமாகச் செயல்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாளைமுதல் யாழ். மாவட்டத்தில் செயல்படத் தொடங்கும் தவறணைகளுக்கும் சீவல்தொழிலாளர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பளிப்பதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. தவறணை

(2-ம் பக்கம் பார்க்க)



### நாளை பாடுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் ரசிக ரஞ்சன சபாவின் இருபத்திரோராவது ஆண்டு இசைவிழாவின் நாளை மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளில் சங்கீதரத்தினம் செல்வி அம்பிகை சுப்பிரமணியத்தின் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் இடம்பெறுகிறது. யாழ் ரசிக ரஞ்சன சபாவின் பழைய மாணவியும் இராமநாதன் இசைக்கழகத்தில் சித்தூராரிடம் பயின்றவருமான செல்வி அம்பிகையின் கச்சேரிக்கு செல்வி தனதேவி சுப்பையா வயலினும், செல்வி ஜெயமணிதேவி ஐயாத்துரை மிருதங்கமும் வாசிக்கின்றனர்.

# ரூ $3\frac{1}{2}$ லட்சம் பெறுமான கடத்தல் பொருள்கள்

## முல்லைத்தீவில் சிக்கின!

யாழ்ப்பாணம், ஞாயிறு

கள்ளக்கடத்தல் பொருள்கள் எனக்கருதப்படும் முப்பத்தைந்து லட்ச ரூபாய் பெறுமதியான பொருள்களை முல்லைத்தீவுப் பொலிசார் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்புவீதியில் ஒட்டுசுட்டானில் கைப்பற்றினர்.

இந்தியன் சார்க்கரிபேனுக்கள். நைலோன்வலைகள்.

(11ம் பக்கம் பார்க்க)

### வைத்திலிங்கம் மறுப்பு

(நமது நிருபர்)

"யாழ் கம்யூனிஸ்ட்களுக்கு இலங்கை அரசுக்கு ஆதரவு" என்ற தலைப்பின் கீழ் "ஈழநாடு" 28-4-75ம் திகதி இதழின் 3ம் பக்கத்தில் வெளியிடப்பட்ட செய்தி முதலிலிருந்து இறுதிவரை பொய்யானது என வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு ஏ. வைத்திலிங்கம் கூறுகிறார்.

### மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்ப் பகுதி தொழிலாளரின் மேதினக்கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. அ. அமிர்தலிங்கம், உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. அ. துரைரத்தினம் உட்படப் பலர் உரையாற்றுவர்.

# ஈழத் தமிழ் இலக்கியத் துறையில் புதிய அத்தியாயம்

## அமைச்சர் குமாரசூரியர் கருத்து

(நமது நிருபர் இ. பாலலிங்கம்)

"வெளிநாட்டு இறக்குமதித் தடையினால் உற்பத்தியில் புதிய சாதனையும், விவசாயிகளிடையே புதியதோர் உற்சாகமும் ஏற்பட்டது. இதேபோன்றுதான் வெளிநாட்டு பத்திரிகை, சஞ்சிகையில் இறக்குமதிக் கட்டுப்பாடு ஈழத் தமிழ் இலக்கியத்துறையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும். நாட்டுப்பற்றும் புதிய விழிப்புணர்ச்சியையும் இது உருவாக்கும்" என்று புங்குடுதீவில் நேற்று தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் கூறினார்.

புங்குடுதீவு 10-ம் வட்டார உபதபால் நிலையத்தைத் திறந்து வைத்த அமைச்சர் பேசுகையிலேயே இப்படிச் சொன்னார். யாழ். தபால் தந்தி அத்தியட்சகர் திரு. எம். நடராசா தலைமையில் இவ்விழா நடந்தது.

அமைச்சர் மேலும் பேசுகையில், தபால் தந்தி 9 பிராந்தியங்களாக இருந்து வந்த நாடு இப்போது 15 பிராந்தியங்களாக்கப்பட்டுள்ளது. மக்களின் வசதிகளுக்கு ஏற்ற புதிய புதிய மாற்றங்களையே அரசு இப்போது செய்துவருகிறது. புதிய பாதையில் சென்று புதிய சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அரசு துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. புதிய அரசியல் சாசனம் இந்த நாட்டில் புதியதோர் பாதையை வழிவகுத்துத் தரும்.

'தமிழ்மொழியில் சகல துறைகளிலும் பாண்டித்தியம்பெறும் நிலை உருவாக வேண்டும். தமிழ்மொழியில் ஆங்கில மருத்துவத்தை எப்படிப் படிப்பது என்று கேட்கிறார்கள் சிலர். ஆனால் தமிழில் மருத்துவம்கற்பித்து இந்நாட்டில் திறமையுள்ள டாக்டர்கள் உருவாகத்தான் போகிறார்கள் என்பதை அவர்களுக்குச் சொல்லி வைக்க ஆசைப்படுகிறேன்.

சிங்கள மக்கள் இந்நாட்டில் கலை, இலக்கியத்துறையில் அதிசயிக்கத்தக்கமுறையில் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்றால் இந்நாட்டில் மட்டும் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் மொழி இங்குமட்டும் பேசப்படுகிறது. எழுதப்படுகிறது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். இதனால் அவர்களுக்கு தாமே தம்மொழியையும், கலையையும் வளர்க்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. இதேபோன்ற நிலை ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்படவேண்டும்.

தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு ப. கதிரவேலு, புங்குடுதீவு இ.ச. தலைவர் ஆ. மதியாபரணம், திரு மு. தம்பசிங்கம், திரு எம். வே. வைத்தியநாதன் ஆகியோரும் பேசினர்.

# குரு

**‘சொக்கன்’**

அன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் பிரயாணிகளால் நிரம்பி வழிந்தது.

மந்தியான வேளை. அனற் காற்று வீசிக்கொண்டிருந்தது. ஒரே புழுக்கம் புழுக்கத்தை மீறிய சனநெரிசல்.

யாழ்தேவி வருவதற்கு அறிகுறியான மணி அடித்தது. இளைஞர்கள் சிலர் 'பிளாட்போமி'லிருந்து இறங்கி மறுபக்கத்திற்கு ஓடினார்கள். அந்தப்பக்கத்தாலே நெருக்கடி இல்லாமல் ஏறிக்கொள்ளலாம் என்ற நப்பாசைதான் காரணம்.

யாழ்தேவியும் வந்தது. இடிதள்ளுக்கிடையே ஒருபடியாகப் புகைவண்டிக்குள் ஏறிவிட்டேன். இனி இடந்தேடு படலம்.

ஏறக்குறைய எட்டு மணித்தியாலங்களைப் புகைவண்டியிலே கழிக்கவேண்டும். 'கோணர் சீட்' கிடைத்தால் நல்லது. இந்தச் சன நெருக்கடியிலே அந்த ஆசை கானல் நீர்தான் என்றாலும் மனம் கேட்கிறதா? 'கொறிடோர்' வழியாகச் 'சூட்கேசை'யும் சுமந்தபடி நடந்தேன். சூட்கேஸ் பிணப்பாரமாயிருந்தது. அதற்குள்ளேதான் எத்தனை பொருள்கள்! நல்லெண்ணெய்ப் போத்தல் இரண்டு. புழுக்கொடியற் பார்சல் ஒன்று. ஒரு முருங்கைக்காய்க் கட்டு. இத்தனையும் அயல் வீட்டுக்காரர்கள் தம் உறவினர்களிடம் சேர்ப்பிக்கும்படி சுமத்திய சுமைகள் இவற்றைவிட எனது உடைகள், 'சேட்டிபிக்கற்று'கள் அடங்கிய 'பைல்' ஒன்று.

'கோணர் சீட்' ஆசையிலே கிடைத்த சிறிய ஆசன வசதிகளையும் இழந்து, வழியில் நின்ற பிரயாணிகளையும் இடித்துத்தள்ளியபடி முன்னேறினேன்.

எத்தனையோ தெரிந்த முகங்கள். ஆனால் தெரியாதது போலப் பாவனை! இடங்கேட்டுவிடுவேனோ என்ற அச்சம். எனக்கும் அவர்களைத் தெரிந்துகொண்டதாய்க் காட்ட விருப்பமில்லை. நின்று பேசிக்கொண்டிருந்தால் 'கோணர் சீட்' கிடைக்காது.

ஒன்று, இரண்டு, மூன்று பெட்டிகள் கடந்தாயிற்று. என் எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை.

அயர்வோடு பெட்டியை நடுவழியில் வைத்தபடி பக்கங்களிலுள்ள ஆசனங்களைப் பார்த்தேன். ஒன்றில் ஏறக்குறைய ஐந்துபேர் நெருக்கியடித்தபடி அமர்ந்திருந்தார்கள். மறு ஆசனத்திலே ஒரே ஒருவர் நீட்டி நிமிர்ந்து தலைக்குத் தலையணையாகச் 'சூட்கேஸ்' ஒன்றை வைத்தபடி கண்களைமூடிப் படுத்திருந்தார்.

எனக்கு எரிச்சலாய் இருந்தது. இத்தனை பேரின் கஷ்டத்திலே ஒருவருக்குச் சுகம்! ஏதோ சீதனப் பொருளிலே உரிமை பாராட்டுவதுபோல அந்த ஆசனத்தைத் தனியுடைமையாக்கிக் கொழும்பு வரை அவர் சுகமாகப் பள்ளிகொள்ளப்போகிறார். இதற்கு விடக்கூடாது.

அவரின் காலிலே தட்டி எழுப்ப எண்ணினேன். அதே வேளையில் வேறோர் எண்ணம் தடுத்தது. 'இவர் தட்டி எழுப்பினாலும் எழும்பப் போவதில்லை, எழுந்தாலும் ஏதோ சுகவீனம் என்று நடித்துக்காட்டிச் சாக்குப்போக்குச் சொல்லுவார். அல்லது சீறிவிழுவார். அநுராதபுரம் வரை அவரின் வீரத் தனத்துக்கு 'லைசென்ஸ்' உண்டு!

எனவே அவரை எழுப்பாமல் அடுத்த ஆசனத்தை நோக்கிச் சென்றேன். சூட்கேசை வைக்க நான் குனிந்த பொழுது 'சேர்! இப்படி வாருங்கோ' என்றது ஒரு குரல்.

நிமிர்ந்தேன் அங்கே என் பழைய மாணவன், சத்திகுமார் தன் ஆசனத்திலிருந்து எழுந்து என்னை அதில் இருக்க வருமாறு அழைத்தான்.

தயங்கினேன். ஒருவருடைய வசதியீனத்தில் இன்னொருவர் வசதி பெறுவதா என்ற மனிதத்தன்மை சற்று மேலோங்கி நின்றது. ஒரு கணம்.

ஒருகணந்தான். ஆனால் 'கோணர் சீட்' ஆசை அந்தத் தயக்கத்தை உதட்டளவிலே கொண்டுவந்து நிறுத்தியது! 'பரவாயில்லை நீர் இரும் நான் வேறு இடம் தேடுறன்' என்று சொல்லியபடியே அவன் எழுந்திருந்த ஆசனத்தை நோக்கி முன்னேறினேன்!

'நான் கிளிநொச்சிவரைதானே? நீங்கள் வசதியாய் இருங்கோ சேர்' என்றுகூறியபடி சத்திகுமார் என் சூட்கேசை வாங்கிக்கொண்டான்.

அவன் அதை மேலேயிருந்த தாங்கியில் வைத்தபொழுது நான் வசதியாக அவன் இருந்த 'கோணர் சீட்டி'ல் அமர்ந்திருந்தேன்.

அவன் எனக்குச் செய்த மரியாதையையும், உதவியையும் கண்ட சக பிரயாணிகள் எங்கள் இருவரையும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். 'இந்தக்காலத்திலும் இப்படி ஒரு மாணவனா?' என்ற கேள்விக்குறி அவர்களின் உள்ளங்களிலே விழுந்திருக்கவேண்டும்.

எனக்கும் வியப்புத்தான். இரண்டு ஆசனங்களுக்கு அப்பால் நான் வந்துகொண்டிருந்தபொழுது, என்னை ஒரு காலத்தில் கற்பித்த ஆசிரியர் என்னைப் பார்த்து அறிந்ததற்கு அறிகுறியாக முறுவல் பூத்துத் தலையசைத்தபோது தொணதொணப்புக்காரரான அவரிடமிருந்து தப்பிவர அவரைத் தெரியாதது போல பாவனை பண்ணிவந்தவன் நான். ஆனால் இவனோ...

(2)

சத்திகுமாரை நிமிர்ந்து தலையிலிருந்து கால்வரை பார்த்தேன். கால்களை இறுக்கும் 'ஸ்ரெற் பான்ற்', டெரிலின் சேட், கன்னத்தாடி, அரும்பு மீசை, பரட்டைத் தலை ஆகிய அலங்காரங்களோடு இருக்கவேண்டியவன் என்று என்னுள் கற்பனை பண்ணியிருக்கக் கூடவில்லை.

ஆனால் அவனோ, அரைக்கை வெள்ளைச் சட்டையும், வேட்டி சாறம் ஒன்றும் அணிந்திருந்தான். கன்னத்தாடியோ, அரும்புமீசையோ, பரட்டைத்தலையோ இல்லை. சாதாரணமாகத்தான் இருந்தான். எனக்குச் 'சப்' என்று போய்விட்டது.

அவனைப் பார்த்துச் சிரித்தேன். அவனும் சிரித்தான். 'கொழும்புக்கா போறியள் சேர்' என்றான்.

'ஓமோம்! ஓர் இன்டெர்வியூவிற்குப் போறன்.'

'அடிக்கடி மாஸ்டர்மாரைப் புகைவண்டியிலே சந்திக்கிறன், எல்லாரும் 'இன்டர்வியூ' என்டுதான் சொல்லினம்' என்று எனக்குப் பக்கத்திலிருந்தவர் சொல்லி விட்டுச் சிரித்தார்.

சத்திகுமார் சிரிக்கவில்லை. அவன் பார்த்த பார்வையில் அவர் அடங்கிப்போய் விட்டார். அவர் அதற்குப் பிறகு எங்கள் உரையாடலில் தலையிடவில்லை.

'இப்பவும் அங்கைதானே படிப்பிக்கிறியள் சேர்' என்று சத்திகுமார் கேட்டான்.

'ஓம்! நீர் என்ன செய்யிறீர்?'

'நான் கிளிநொச்சியில் வயல் செய்யிறன் சேர்'

[illegible] என்று அவன் சொன்ன பொழுது என்னால் நம்பமுடியவில்லை.

அவனுடைய தகப்பனார் கல்லூரி ஒன்றின் அதிபராயிருந்தவர். தாய் இப்பொழுதும் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். சத்திகுமார் அவர்களின் ஒரே மகன்.

'என்ன, வயல் செய்கிறீரோ? நீர் எஞ்சினியருக்குப் படித்துக்கொண்டு இருக்கிறீர் என்றல்லவோ நினைத்தேன்?' என்று என் வியப்பைக் கேள்விச்சரங்களாய் அடுக்கினேன்.

சத்திகுமார் சிரித்தான். 'எல்லாரும் எஞ்சினியராக இயலுமோ சேர். எனக்குத்தான் படிப்பு அவ்வளவு ஓடாது என்று உங்களுக்குத் தெரியுந்தானே? கல்லூரியைவிட்டதும் கொழும்பிலே நாவலர் கோலிலே சேர்ந்து 'அட்வான்ஸ்லெவல்' இரண்டு முறை எடுத்தன்; சரிவரயில்லை. விட்டுவிட்டு அப்பாவின் வயலைச் செய்யத் தொடங்கிவிட்டன்.'

எனக்கு இன்னமும் நம்ப முடியவில்லை. சத்திகுமாரின் தந்தை தம் மகனின் எதிர்காலத்தைப்பற்றிப் பெரிய பெரிய கனவுகளைக் கண்டது எனக்குத்தெரியும். கீழ்வகுப்புகளில் அவன் படித்தகாலத்திலேயே அடிக்கடி எங்கள் கல்லூரிக்கு வருவார். அவனுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தனித்தனி சந்தித்து அவன் முன்னேற்றம்பற்றி விசாரிப்பார். சில வேளைகளில் இந்த விசாரணை எங்களுக்குத் தலைவேதனையாய் இருப்பதும் உண்டு. ஆனாலும் ஒரு கல்லூரியின் அதிபர் என்றவகையில் அவரின் தொந்தரவுகளையெல்லாம் சகித்துவந்தோம்.

'சத்திகுமாருக்கு இலங்கைக் கல்வி சரிப்படாது. அவன் 'அட்வான்ஸ்லெவல்' பாஸ்பண்ணினதும் இங்கிலாந்துக்கு அனுப்பப்போறன். 'மெக்கானிக்கல் எஞ்சினியரிங்' பயிற்சிபெற்றுவந்தானென்றால் நல்ல எதிர்காலம் உண்டு. அந்தப் பயிற்சி முடிந்து 'போஸ்ற் கிருட்யுவேற்' படிக்கவிரும்பினாலும் படிப்பிக்கத் தயாராய் இருக்கிறேன்' என்று அடிக்கடி அவர் சொல்லுவார்.

'அப்பா இதற்கு எப்படிச் சம்மதிச்சார்? அவருக்கு நீர் படிப்பை விட்டது பெருத்த அதிர்ச்சியாய் இருக்குமே!' என்று கேட்டேன்.

'ஆரம்பத்திலை பெரும் வருத்தம்தான். இப்போது எல்லாம் சரியாய்ப்போய் விட்டுது. வயலையும், பயிரையும், வாழ்க்கையையும் அவர் இப்ப நன்றாய் நேசிக்கப் பழகிவிட்டார்' என்று சத்திகுமார் சிரித்தபடி சொன்னான்.

(3)

படிக்கிற காலத்தில் சத்திகுமார் பெரியவால். அதிபருக்கே அவன் பயப்படமாட்டான். அவன் வகுப்பிலிருந்தால் ஆசிரியர்களுக்கும் கலக்கம்தான்! ஆசிரியர்கள் அவனோடு முரண்டுகள் தொடுத்தது. ஆசிரியர்களுக்குப் பட்டப்பெயர்களை வைத்துக் கல்லூரிச் சுவர்களிலும் கரும்பலகையிலும் எழுதிவிடுவான். கல்லூரி நாடகங்களில் அவன் நடாத்திய திருவிளையாடல்கள் மிகப் பல.

எனக்கு அவன் வைத்த பட்டம் 'தனிசை'. எனக்குச் சற்றே பெருத்த உடம்பு. கன்னங்களும் உப்பியிருக்கும். சத்திகுமாரின் கற்பனையிலே நான் 'தனிசை.'

ஒருநாள் தமிழ்ப்பாட நேரத்தில் சில மாணவர்கள் புத்தகம் கொண்டுவரவில்லை. அவர்களில் சத்திகுமாரும் ஒருவன். புத்தகம் கொண்டு வராதவர்களை வேறு வகுப்புகளுக்குச் சென்று புத்தகம் வாங்கிவரச் சொன்னேன். சத்திகுமாரைத் தவிர மற்ற யாவரும் புத்தகங்களை வாங்கிவரச் சென்றார்கள். சத்திகுமார் செல்லவில்லை. எனக்குச் சரியான கோபம். ஆனாலும் அவன் செயலைக் கவனியாதது போல இருந்தேன்.

சென்றவர்களில் ஒரு சிலருக்குத்தான் புத்தகம் கிடைத்தது. 'புத்தகம் உள்ளவர்களோடு புத்தகம் இல்லாதவர்கள் சேர்ந்திருங்கள்' என்று நான் கட்டளையிட்டேன். அதற்கும் அவனைத் தவிர்ந்த மற்றவர்கள் பணிந்து அவ்வாறே செய்தார்கள். ஆனால் சத்திகுமார் தன் இடத்திலேயே இருந்தான். அவனைக் காப்பாற்ற எண்ணி அவன் பக்கத்திலே போயிருந்த அவன் நண்பன் செல்வராஜனையும் சத்திகுமார் அதட்டிக் கலைத்தான்.

இது என் பொறுமைக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. சத்திகுமார் இருந்த இடத்திற்குச் சென்று அவனை இழுத்துக் கோபந்தீர அவன் கன்னம் - முதுகு - பிடரி எல்லாம் அறை அறை என்று அறைந்தேன். அவன் அடி தாங்காமல் வகுப்பறையிலிருந்து எழுந்து ஓடிவிட்டான். ஓடும்பொழுது, 'வெளியிலை வாரும் உம்மைக் கவனித்துக்கொள்ளுறன்' என்று சொன்னான்!

நான் பயந்தேன்! அவனுக்குக் கல்லூரியின் சூழலிலிருந்த காவாலிகளோடு சிநேகிதம் உண்டு. நடுவில் நான் சைக்கிளிலே போகும்போது அவனும் அவன் கூட்டத்தினரும் ஏதாவது செய்துவிட்டால்... அடிபடுவதிலும் பார்க்க அதனால் உண்டாகும் அவமானத்தை எவ்வாறு சகிப்பது? நாளைக்கு மற்ற மாணவர்களும் இவன் வழியிலே செல்வார்களே!

நல்லகாலம். நான் பயந்ததுபோல ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் கல்லூரிச் சுவர்களெல்லாம் 'தனிசை' மயமாகிவிட்டது!

அதை நான் சகித்துக் கொண்டேன். தலைக்குமேல் வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்ற ஒரு திருப்தி!

பத்தாம் வகுப்பிலேயே 'லோங்ஸ்' அணிந்து நவநாகரிகச் சின்னமாய் நடமாடியவன் சத்திகுமார், படமாளிகைகளிலும் ஏன் கள்ளுக்கொட்டில்களிலும் தன் பாதபங்கயங்களைப் பதித்துத் திரிந்தவன்தானே?

இன்று......

எவ்வளவு அடக்கம்! எவ்வளவு மரியாதை! என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை.

(4)

எனக்கு ஒரு பழக்கம். படமாளிகையின் இருளிலும், றெயில் வண்டிகளிலும் ஒளிவு மறைவாக 'சிகரெட்' பிடிப்பதுதான் அது. 'சைவாசாரமுடையவர், ஒழுக்கசீலர்' என்ற புகழுரைகளைக் காப்பாற்ற வேண்டுமென நினைத்து. மறைவிலே யாருக்கும் தெரியாமல் 'சிகரட்' பிடிப்பதில் அப்படி ஒரு ஆசை! புகைவண்டியில் ஏறும்பொழுதே 'பிறிஸ்டல் பைக்கற்' ஒன்றும், நெருப்புப் பெட்டியும் வாங்கி சட்டைப் பையுள் போட்டிருந்தேன். பையினுள்ளே கையைவைத்தபொழுது அவையிரண்டும் தட்டுப்பட்டன. ஆனால் சத்திகுமாருக்கு முன்னால் புகைக்கும் திருப்பணியைச் செய்யக் கூச்சமாயிருந்தது. ஆனால் புகைக்கும் ஆசையோ உள்ளத்தில் நெருப்பாய்ப் பற்றியெரிந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டேன்.

'உமக்குப் படிக்கேல்லை என்றமனக்குறை இல்லையா? கமம் செய்வதற்கு உமக்கு வெட்கம், கூச்சம் ஏற்படவில்லையா?' என்று சத்திகுமாரைக் கேட்டேன்.

சத்திகுமார் சொன்னான்: 'கமத்தொழிலை நானே விரும்பி ஏற்றனான். காவாலி, கடைப்புலி என்ற ஏச்சுப் பேச்சுக் கேட்பதிலும் இது மேல். இந்த வருடக் கடை எனக்கு வயல் செய்ததில் எல்லாச் செலவும்போக இரண்டாயிரம் ரூபா மிஞ்சியது. என் முயற்சியாலே கிசுகிசு என்டு வளர்ந்து, பச்சைப் பசேலென்டு நிற்கிற பயிரைக் காணுகையில் உண்டாகும் சந்தோஷத்துக்கு ஈடே இல்லை சேர்!' இவ்வாறு சொல்லிய பொழுது அவன் கண்களிலே புலப்பட்ட களிப்பை என்னால் மறக்கமுடியாது.

இருபது வருடமாக ஆசிரியராகக் கடமையாற்றி நான் இரண்டுரூபா மிச்சம் பிடிக்கவில்லை. சத்திகுமாரோ ஒரு சில வருடத்திலேயே இரண்டாயிரம் ரூபா மிச்சம் பிடித்துவிட்டான். கமத்தொழில் இவனைப் பொறுப்பு வாய்ந்த பெரிய மனிதனாக்கியுள்ளது. இவனுக்கு முன்னால் நான் ஒரு தூசு... நான் கூனிக்குறுகிப்போனேன்.

(5)

சத்திகுமார் 'புவே' சென்று எனக்குச் சோடா வாங்கி வந்து தந்தான். கிளிநொச்சி வரும்வரை அவன் நின்றபடியே என்னோடு பேசிக்கொண்டு வந்தான். நான் இருக்கும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை.

இறங்கும்பொழுது கடகத்தில் வைத்திருந்த பெரிய நெல்லுச் சாக்குக் கட்டை அநாயாசமாகத் தூக்கித் தோளிலே வைத்தபடி எனக்குக் கையசைத்துப் பிரியாவிடை அளித்தான்.


மெலிந்துயர்ந்த அவன் கம்பீரமாக நடந்து புகைவண்டி நிலையத்தைக் கடக்

(10-ம் பக்கம் பார்க்க)

வடக்கில் தொழில் வளம் 18 | விமலா - நிர்மலா

# "வளரும் தொழிலுக்கு மூலப்பொருள் தட்டுப்பாடு ஒரு முட்டுக்கட்டை"

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதியார். அவர் அன்று குறிப்பிட்டுப்போனது எந்தளவு மகத்தான புனிதமான வாக்கியம். இவை இரண்டுமே ஒரு நாட்டை வளம்படுத்துவன; வாழவைப்பன இவற்றில் தொழில் செழிக்க பிரதானமாக வேண்டியவை மூலப்பொருள் மூதல், மனித சக்தி, நுட்பத்திறன் ஆகியவைகளாகும். முன்னேற்றமடைந்த நாடுகளில் இவையாவும் ஒருங்கே கிடைத்து விடுகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நம் நாடு போன்ற நாடுகளில் இவற்றைப் போதியளவு பெறுவது கஷ்டமான காரியம். நம்நாட்டிலுள்ள பல தொழிற்சாலைகளை நாம் சென்று பார்த்துள்ளோம். அங்கெல்லாம் மனிதசக்திக்குக் குறைவில்லை. நுட்பத்திறமைக்கும் தட்டுப்பாடில்லை. முதலும் ஓரளவுண்டு ஆனால் மூலப்பொருள் பற்றும் குறையே தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகவிருக்கிறது.



தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம்.

சமீபத்தில் நல்லூரிலுள்ள "தேவிகா" தொழிற்சாலைக்கு நாங்கள் சென்றிருந்தபோது மூலப் பொருள் தட்டுப்பாடு பற்றியும் ஆனால் தொழிற்சாலையும் தொழிலாளர்களும் எவ்வளவுதூரம் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அதன் நிர்வாகி விபரமாக தெரிவித்தபோது நம் பகுதியின் தொழிற்சாலைகள் நிலை குறித்து வருத்தப்படாதிருக்க முடியாது. ஊக்கமும், உற்சாகமும் உள்ள இந்தத் தொழிலதிபர்களுக்கு அரசு மூலப்பொருள் விடயத்தில் உதவி செய்தால் இவர்கள் அரசுக்கு உதவி அதன் பிரச்சினையைத் தீர்ப்பார்களல்லவா?

### ஸ்தாபகர்

தேவிகா தொழிற்சாலை சேலைகள் வர்ணம் தீட்டுதல் அச்சடித்தல் ஆகிய வேலைகளைச் செய்கிறது. இதுமட்டுமன்றி நெசவும் நடைபெறுகிறது. இக்கலையில் ஆர்வமும் நல்ல பயிற்சியும் கொண்ட திரு. எம். கந்தையாவே இத் தொழிற்சாலையை ஸ்தாபித்தவர். இவர் கொழும்பு அரசினர் நுண்கலைக்கல்லூரி விரிவுரையாளர். தந்தையார் ஆரம்பித்த தொழிலையே தானும் செய்ய விரும்பி இவரின் தனயன் திரு. கே. செல்வநாதன் இத் தொழிற்சாலையை நிர்வகிக்கிறார்.



'தேவிகா' ஸ்தாபகர் திரு. கந்தையா காரியாலயத்தில் அன்றாட அலுவல்கள் பற்றி ஆராய்கிறார்.

வடபகுதித் தொழிற்சாலைகள் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில்தான் இயங்குகின்றன என ஆரம்பித்த திரு செல்வநாதன் தொடர்ந்து கூறுகிறார்.

"எங்கள் தொழிலுக்கு வேண்டிய மண்ணெண்ணெய், ரசாயனப் பொருட்கள், நிறப்பவுடர்கள் முதலியன தலைநகரிலும் பார்க்க இங்கு கூடிய விலைக்கே பெற வேண்டியுள்ளது. ஆனால் இரு இடங்களிலும் உற்பத்தியாகும் பொருள்களுக்கும் ஒரே விலையே நிர்ணயிக்கப்படுகின்றன; மடக்கிலும் பார்க்க கொழும்பில் ஒரு தொழிற்சாலை லாபத்தைக் கொடுக்கும் என்றே கூறலாம்.

எங்களுக்கு வெள்ளைத் துணி சலுசலா மூலமே கிடைக்கிறது. அச்சு வேலைகள் வர்ணம் தீட்டுதல் ஆகியன. செய்த பின்பு சலுசலாவே அவற்றை வாங்குகிறது. இதனால் ஏற்றுமதி, இறக்குமதி செலவு அதிகமாகிறது.

### மூலப்பொருள் பற்றுக்குறை

பெருமளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என நாங்கள் நினைத்தாலும் மூலப்பொருள் எங்கள் எண்ணத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. முதலில் 23 பேர் இங்கு வேலை செய்தனர். நூலின்மை காரணமாகத் தற்போது 33 பேர் மட்டுமே இங்கு வேலை செய்கிறார்கள் என்ற அவர் கூறிக்கொண்டு வருகையில் இங்கு உற்பத்தி செய்யும் கைத்தறிப்புடவை வகைகளைக் காட்டி வருகிறார். திரு. செல்வநாதன் வெள்ளைத் துணிகளில் அழகான பலவித அச்சடி வேலைகள் செய்யப்படுகின்றன. நல்ல தரமான கைத்தறிச் சேலைகள் நெய்யப்படுகின்றன. இவை மட்டுமன்றி சாயம்போய் வெளுப்பாகி உடுக்க இயலாதே என விசனப்படுபவர்களின் கவலையையும் நீக்குகிறது தேவிகா. இத்தகைய சேலைகளுக்கு சாயம்போட்டு குறைந்த செலவில் புதிய சேலைகளாக கொடுக்கிறது.

ஆண், பெண் இருபாலாரும் இங்கு தொழில் புரிகின்றனர். தொழிலாளர்க்குவேண்டிய சகல வசதிகளும் இங்கு அளிக்கப்படுகின்றன. வலது குறைந்தவர்களுக்கும் இங்கு வேலை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கைதடி குருடர் செவிடர் பாடசாலையில் பயிற்சிபெற்ற வாய் பேச இயலாத ஒருவர் டிசைன் வரைபவராக திறமையுடன் செயலாற்றுகிறார்.

## ஊக்கமும் உற்சாகமும் ஒருங்கே பெற்ற 'தேவிகா' தொழிலதிபர் கூற்று

ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவற்றை கடைப்பிடித்து...

...கள் சாய மூட்டும் அச்சடிக்கும் வாயில் சேலைகள் யாவற்றையும் சித்திரைகளோடு சலுசலாவிற்கே கொடுத்து விடுகிறீர்களா என நாம் கேட்டபோது அச்சடித்த டிசைன்கள் சித்திரைகள் ஆகியவற்றை சலுசலாவுக்குக் கொடுக்கிறோம். மற்றவைகளை கொழும்பிலுள்ள வர்த்தகர்களுக்கு மொத்தமாகக் கொடுக்கிறோம். இதற்கு அரசு வரி விதிக்கிறது. என்று கூறினார்.



அச்சடிக்கப்பட்ட துணிகளை இறுதியாக மடித்து அடுக்குவதில் ஈடுபட்டுள்ள இம் மங்கையர் மென்கரங்கள்

அரசின் சில கட்டுப்பாடுகளும், மூலப்பொருள் தட்டுப்பாடும் இத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பினும் இடப்பதைக் கொண்டு வாராமலிட்டுத் தக்கவகையில் செவ்வனே தொழிற்சாலையை நடாத்தி ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் இயங்கிவரும் "தேவிகா" போன்ற தொழிற்சாலைகள் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவிக் கரம் நீட்டத்தக்கவை. இத்தகைய ஸ்தாபனங்களுக்கு தேவையான மூலப்பொருள் அன்னிய செலாவணி ஆகியவற்றை அரசு உதவினால் இவற்றால் நல்ல பயன்களைப் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் விரும்பிய நிறங்களில்
வண்ணப்பூ அச்சடி வேலைப்பாடுகள் அமைந்த
சேலைகள், விரிப்புகள், கதவு யன்னல் சேலைகள்
ஆகியவற்றை தரும்
வட இலங்கையின் முன்னணி ஸ்தாபனம்!

பட்டுப் புடவைகளின் (SCREEN) தயாரிப்பாளர்கள்,
சகலவிதமான துணிகளையும் அச்சிடுபவர்கள்

தேவிகா ஆர்ட் என்டர் பிறைசெஸ்

6, கைலாய பிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
போன் — 218.

கிளை: 24, பிளவர் வீதி
கொழும்பு—7
போன்: 24073

# தமிழக முதல்வர் வீட்டுக்கு அருகே குடியிருக்கும் 'தங்க'மான நடிகர்!

'திரை உலகில் சுலபமாக கிடைக்கக் கூடிய வற்றை தவிர்த்து வருகிறேன்'

"மந்திரி குமாரி"யில் தனது விழிகளால் நடித்த தமிழ் திரைப்பட ரசிகர்களின் உள்ளத்தில் நிரந்தரமான ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் எம். என். நம்பியாரை நான் அவரது இல்லத்தில் சந்தித்த போது கேட்ட ஒரு கேள்விக்கு மேற் தீர்மானிக்க எனக்கு வெகு நேரமாகத்தான் போய்விட்டது.

தமிழக முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களின் இல்லம் அமைந்துள்ள அந்த தெருவில் 2-ம் இலக்க வீட்டில் இருக்கும் நம்பியாரது வயதைக் கண்டு பிடிப்பதில் எனக்கும் என்னுடன் வந்திருந்த இரு நண்பர்களுக்குமிடையே ஏற்பட்ட

குணத்திலும் சரி, நிறத்திலும் சரி தங்கமான 'வில்லன்' நடிகர் ஒருவர் இருக்கிறரென்றால் அவர் 'சாக்சாத்' நம்பியாராகத்தான் இருக்க முடியும்! இதனை அவரோடு நேரடியாகப் பழகியவர்கள் ஒப்புக் கொள்வார்கள். எந்தக் கட்சியோடும் சேராமல் எந்த நடிகர் கோஷ்டியுடனும் சேர்ந்து கொள்ளாமல் 'தானுண்டு, தன்பாடுண்டு' என்று வாழ்பவர் இந்த நம்பியார். வயது 51 ஆகிவிட்டாலும் இளமை குன்றாத இவர் இனிமையானவர்...

தமிழக நட்சத்திர உலகில் சுற்றுலா நடாத்திவிட்டுத் திரும்பிய 'பிலிம் நியூஸ்' சி. சு. புனிதலிங்கம் வாரா வாரம் தாம் சந்தித்த நட்சத்திரங்களுடன் நடாத்திய பேட்டியை சுவைபட இங்கு எழுதுவார்.



நம்பியாருடன் கட்டுரையாளர்

கண்டவுடன் அவர் சிரிப்பும் சிந்தனையும் கலந்த குரலில் பதிலளித்தார்.

கொடுமையான மீசையை வைத்துக் கொண்டு கடுமையான குரலில் கர்ஜிக்கும் நம்பியாரா இவர் என்பதை

ஒரு போட்டியில் எல்லோருக்குமே தோல்வி ஏற்பட்டது. முடிவு சொன்னவர் நம்பியார்தான். எனக்கு இப்போது வயது 51 என்ற அவரது பதிலின்போது எங்களுக்கிடையே சில நிமிட மௌனம் நிலவியது.

எமது மௌனத்தைக் கலைக்க விரும்பிய திருமதி நம்பியார் குளிர்பானம் கொண்டு வந்தார்.

**தமிழகசினிமா சுற்றுலா — 1**

"நீங்கள் இன்னும் இளைஞர் போல் இருப்பதன் ரகசியம்தான் என்ன?" எனது கேள்விக்கு நம்பியார் அளித்த பதில் இதுதான்.

"நான் உணவை அளவோடு சாப்பிடுகிறேன். தேகப்பயிற்சி தொடர்ந்து செய்து வருகிறேன். முக்கியமாக திரை உலகில் சுலபமாகக் கிடைக்கக்கூடியவற்றை நான் தவிர்த்து வருகின்றேன். இவ்விதம் கடைப்பிடித்து வந்தால் உடல்கட்டை ஓரளவு காப்பாற்றிக்கொள்ளலாம் என்று நம்புகின்றார் நம்பியார்.

## படத்தில் பயங்கர வில்லன்! பழக்கத்துக்கு இனிமையானவர்!!

**ஐயப்பன் மகிமை**

தமிழ் திரையுலகிலுள்ள அனைவரையும் பக்திமயமாக்கி வரும் நம்பியார் ஒருகட்டத்தில் ஐயப்பன் மகிமை பற்றி பக்திப்பரவசத்துடன் என்னிடம் கூறத்தொடங்கினார்.

'நான் வருடா வருடம் சபரிமலை ஐயப்பனிடம் தரிசனத்துக்கு சென்று வருகிறேன். ஐயப்பனிடம் எனக்கு உண்மையில் அளவற்ற பக்தி உண்டு.

வருடாந்த உற்சவகாலத்தின்போது ஐயப்பனின் திருஉருவம் மலை உச்சிக்கு ஆலயத்திலிருந்து எடுத்துச்செல்லப்படுவது வழக்கம். அப்போது இந்த திருஉருவத்துக்குமேல் ஒரு கருடன் மலை உச்சிவரை பறந்துகொண்டேயிருக்கும். இந்தக்காட்சியை நான் அங்கு உற்சவத்தின்போது சென்ற சமயங்களிலெல்லாம் பார்த்திருக்கிறேன்.

சிவாஜி, டைரக்டர் ஸ்ரீதர் ஆகியோரிடமெல்லாம் இதை நான் காட்டியிருக்கிறேன்.

ஐயப்பன் ஆலயத்தில் இருக்கும்போது எனக்கு வேறொரு தெம்பு ஏற்படுவதை நான் உணர்ந்திருக்கிறேன்.

ஆரம்பத்தில் நம்பியாருடன் ஐயப்ப தரிசனத்துக்கு போவோமா என்று கேட்டவர்கள் இப்போது நம்பியாரும் தம்முடன் வருகின்றாரா? என்று கேட்கிறார்கள்.

இதைச் சொன்னபோது நம்பியாரின் முகத்தில் மெல்லிய சிரிப்பு படர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

திரைப்படத்தில் மனதை திடுக்கிடச்செய்யும் நம்பியார் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது வேடிக்கையாகப்பேசி சிரிப்பை மூட்டினார்.

**அதிக சம்பளம் பெற்றவர்**

"இன்றுள்ள பிரபலநடிகர்களைவிட அதிக சம்பளம் பெற்றவன் நான்" என்று நிறுத்திய நம்பியார் "மூன்று ரூபாய் தான்" என்றபோது கதிரையின் பின்பக்கமாக நான் சரிந்தேன். ஆம் அப்போது மூன்று ரூபாய் ஒரு திரைப்பட நடிகனுக்கு பெரும் தொகைதான்.

## குணத்திலும் நிறத்திலும் 'பத்தரைமாற்று'!

**'ஹிப்பி'கள் வருகை**

நம்பியாருடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது இரு ஹிப்பிகள் மண்டபத்தினுள் நுழைந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தேன். அங்கு வந்த இருவர்களில் உயரமான ஒருவரைச் சுட்டிக்

(11-ம் பக்கம் பார்க்க)

'பிலிம் நியூஸ்'
சி. சு. புனிதலிங்கம்

## சிரிப்புடன் சிந்திக்க வைக்கும் நாகேஷின் பதில்கள்!



'நகைச்சுவை மன்னன்' நடிகர் நாகேஷ் வருகிறார் என்றால், சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தளித்து வயிற்றைப் புண்ணாக்கி விடுகிறார் என்று சொல்லி விடுவீர்கள்!

குணசித்திரப் பாத்திரமேற்று நடிக்கும் போது அவர் சிரித்துக் கொண்டே அழவைத்துவிடுகிறார்!

அருமையான இந்த நடிகரிடம் நல்ல கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன. என்பதை அவரது பதில்கள் எடுத்துக் கூறும்.

கடந்த ஞாயிறன்று இரவு 6-45க்கும் 7 மணிக்குமிடையில் வானொலியில் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் என் நெஞ்சை மட்டுமல்ல கேட்டுக் கொண்டிருந்த ஆயிரமாயிரம் இதயங்களையும் கொள்ளை கொண்டு விட்டன என்பதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

நாகேஷிடம் கேட்ட கேள்விகளையும் அவர் அளித்த பதில்களையும் இங்கு உங்களுக்காக தொகுத்தளிக்கிறேன்.

"தாலி கட்டியவுடன் தம்பதிகள் ஏன் மூன்று முறை சுற்றுகிறார்கள்?" - கேள்வி.

"மூன்று பிள்ளைகளுடன் நிறுத்தி விடு என்றுதான் அர்த்தமாக இருக்குமோ? அல்லது விளையாட்டுப்போட்டிகளின் போது ஒன், டூ, திறி என்றதும் தானே ஓடுகிறார்கள் அதுபோல வாழ்க்கைப் பாதையில் ஓடுவதற்காக மூன்று முறை சுற்றுகிறார்களோ? இப்போது ஒன்றாக சுற்றி விடுவோம். பின்னர் யார் யாரைச் சுற்றுவோமோ என்பதாலோ?" - இது அவர் பதில்!

கே: மனைவி மலரையும் அணிகிறாள். இறைவனும் அணிகிறான்; பிணத்துக்கும் சார்த்துகிறார்கள் ஏன்?

ப: மலர்தான் இந்த உலகில் உண்மையான ஒரு 'சோஷலிஸ்ட்' என்பதை இது நினைவூட்டுகிறதல்லவா?

கே: இந்த உலகில் யாரையும் படைக்காமல் உங்களை மட்டும் படைத்துவிட்டு, இறைவன் உங்கள் முன் தோன்றி 'என்ன வேண்டும்' என்று கேட்டால் நீங்கள் என்ன கேட்பீர்கள்?

ப: நான் 'ஆதாமா' ஏவாளா? என்று கேட்பேன். ஆதாம் என்று ஆண்டவன் சொன்னால் ஏவாளைப் படைத்துத்தா என்பேன்" ஏவாள் என்றால், ஆதாமைத்தா என்பேன். தந்தவுடன் எங்கள் இருவரையும் அமைதியாக தனிமையில் இருக்கவிட்டு நீ போய்விடு என்பேன்!

கே: மனித வாழ்க்கையிலும் கமா, கேள்வி, முற்றுப்புள்ளி அடையாளங்கள் உண்டா?

ப: ஏன் இல்லை தற்கொலை செய்பவர்களை 'கமா'வுக்கும், உயிரோடுபோராடிக்கொண்டிருப்பவர்களை "கேள்வி" அடையாளத்துக்கும், காந்தி போன்றவர்களின் வாழ்வை முற்றுப்புள்ளிக்கும் ஒப்பிடலாம்.

கே: அனாதை யார்?

ப: அப்பா, அம்மா இல்லாமல் யாருமே இந்த உலகில் பிறந்திருக்கமுடியாது ஆகையால் மனிதர்களை அனாதைகள் என்று சொல்லமுடியாது. 'காற்று'தான் உண்மையான அனாதை! வேண்டிய நேரம் காற்றை விரும்புகிறோம். தேவையில்லாத நேரம் காற்றே தூரப்போய்விடு என்று ஜன்னலை அடித்துச் சாத்துகிறோம். காற்றில்லாமல் நாம் வாழமுடியுமா? அப்படியிருந்தும் அந்தக் காற்றை மதிக்கிறோமா? இப்போது சொல்லுங்கள் யார் உண்மையான அனாதை என்று!

கே: பிறந்ததும் குழந்தை ஏன் அழுகிறது?

ப: தாயின் வயிற்றில் இருக்கும்போது அழுதால், தாய்தான் அழுகிறாள் என்று யாராவது தவறாக எண்ணி விடுவார்களோ என்பதால் தான் என்று நினைக்கிறேன்?

— 'ராணி' தொகுத்தது



# நாளை மே தினம்

# தொழிலாளி வர்க்க ஒருமைப்பாட்டு தினம்

ஐ. பெத்ரோவ்

'உலகத் தொழிலாளிகளே ஒன்றுபடுங்கள்' என்ற அறைகூவலுக்கிணங்க எல்லா தேசங்கள், இனமக்களின் ஒருமைப்பாட்டுப்பிரகடன தினமே மே தினம். சோஷலிஸம், சமாதானம் என்ற பாட்டாளிகளின் அபிலாஷையை எடுத்தோதும் நன்னாளாகத் திகழ்கிறது மே தினம்.

**சுரண்டலை எதிர்த்து...**

1886-ம் ஆண்டு மே முதல் தினத்தில் சிகாகோவிலுள்ள உழைப்பாளி மக்கள், மிருகத்தனமான சுரண்டலை எதிர்த்து தெருக்களில் ஊர்வலம் வந்தனர். அமெரிக்க அதிகாரிகளோ அந்த ஆர்ப்பாட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தனர். அதன் பின் 1889-ம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுகளின் காங்கிரஸ், ஒவ்வொரு ஆண்டும் அந்த தினத்தை 'மாபெரும் சர்வதேச ஒருமைப்பாட்டு'ப் பிரகடன தினமாகக் கொண்டாட வேண்டுமென முடிவெடுத்தது. அதுதான் வரலாற்றுப் பிரசித்தமான இந்த தினம் தோன்றியதன் பின்னணியாகும்; இவ்வாண்டு அந்த தினம் 83-வது தினமாகக் கொண்டாடப்படும்.

உலகின் முதலாவது தொழிலாளர் - விவசாயிகளின் அரசான சோவியத் யூனியனது பொருளாதார வெற்றிகள், உற்பத்தியின் சோஷலிச உறவுகளின் மேன்மையை ஐயந்திரிபுற எடுத்துக் காட்டுகின்றன.

பொருளாதார வளர்ச்சியின் துரித வீதங்களையும், மக்களின் கலாச்சார, வாழ்க்கை தர மேம்பாட்டையும் சோஷலிஸம் நிலையாக அதிகரித்து அவரச் செய்வதோடு, ஒரு புதிய சமுதாயத்தின் சமூக அமைப்பினையும் தோற்றுவித்துள்ளது; பிற்போக்குவாதிகளின் சோதனைகளையும் வெற்றிகரமாகச் சமாளிக்கும் வகையில் இதற்கு முன்னர் கேட்டறியா ஒருங்கிணைந்திருக்கிறது. உலகப்புரட்சிப்போக்கின் வளர்ச்சிக்கு அது தீர்மானமான பங்கைச் செலுத்தி வருகிறது. அந்தஸ்தையும் காட்டிலும், தனது முன்னுதாரணத்தின் மூலமே அதன்பங்கு சக்திமிக்கதாயுள்ளது. சோஷலிஸ நாடுகளின் நடைமுறை அனுபவம், அவற்றின் சாதனைகளும், முதலாளித்துவ நாடுகளுடன் நடைபெறும் போட்டியில் அவற்றின் வெற்றிகளும் உலகமக்கள் அனைவரின் கவனத்தையும் சோஷலிசத்தின் பால் திருப்பியுள்ளது.

**தொழிலாளர் வர்க்கமும் சர்வதேச ஒருமைப்பாடும்**

முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர் வர்க்கமும், ஆரம்பகால மே தின விழாக்களின்போது இருந்ததைப்போன்று இன்றில்லை. அது பெரும் வளர்ச்சியுற்றுள்ளது. வர்க்கப்போராட்டங்களில் அது பண்பட்டு, வளர்ச்சிகண்டுள்ளது. முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப்போராட்டங்களைத் தலைமைவகித்து நடத்திய தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பங்கும் பெருமளவு அதிகரித்துள்ளது.

ஆசிய ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த 70 இளம் நாடுகள், காலனியாதிக்க நுகத்தடியைத் தூக்கியெறிந்து இன்று தேசிய சுதந்திரக் கொடிகளைப் பறக்கவிட்டுள்ளன. அந்த நாடுகளின் இளம் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், ஜனநாயக நோக்கம்கொண்ட அறிவுத்துறையினர் ஆகியோர், தமது பொருளாதார சுதந்திரத்திற்காக ஏகாதிபத்தியச் சக்திகளிடமிருந்து விடுதலைபெற்ற பொருளாதார சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வருகின்றனர்; சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் தார்மிக, அரசியல் ஆதரவுடனும், ராஜிய, பொருளாதார, தொழில்நுட்ப, தேவைப்பட்டால் ராணுவ உதவியுடனும். இந்நாடுகளிலுள்ள உழைப்பாளி மக்கள், சமூக முன்னேற்றத்திற்காகவும், முதலாளித்துவமற்ற பாதையில் வளர்ச்சியுறுவதற்காகவும் பாடுபட்டு வருகின்றனர். 'மூன்றுவது உலகைச்சேர்ந்த மக்களின் அரசியல் வாழ்வில் "சோஷலிசம்" என்ற சொல்லே மிகப் பிரபலமாகவுள்ளது.



மேதினத்தில் எதிர்காலத் தொழிலாளர்களாம் மாணவரின் குதூகலம்.

மார்க்ஸ், எங்கெல்ஸின் காலத்தில் சர்வதேசக் கம்யூனிச இயக்கம், ஒரு சிறிய அரசியல் கட்டமாகத் தொடங்கிற்று. அக்டோபர் புரட்சியின் விளைவாக, அது ஒரு புதிய, மிகப்பெரிய வல்லமையும் சக்தியும் கிடைத்தது. இன்றோ அது சக்திமிக்க வெள்ளப்பெருக்காக மலர்ந்துள்ளது இன்று உலகில் ஏறக்குறைய 90 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் உள்ளன. அவைகள் வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றன; அவற்றின் போராட்ட அனுபவம் பலவகையானது; அது நிதானமாக வளர்ச்சியடைந்து வருகின்றது; சோஷலிஸ வழிகளில் உலகை மாற்றி அமைப்பதற்கான புரட்சிகர போராட்டத்தில், செல்வாக்கு மிக்க அரசியல் சக்தியாக உருப்பெற்றுள்ளது.

அதனால்தான், தற்போதுள்ள சூழ்நிலைகளில், மார்க்சிய லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லாக் கம்யூனிஸ, தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் ஐக்கியத்திற்கான போராட்டம் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது.

எனவே, எல்லா நாடுகளிலும் நடத்தப்பெறும் மே தின விழாக் கொண்டாட்டங்கள், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் ஆகியவற்றுக்கெதிராகவும், தேசவிடுதலை, சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றிற்காதரவாகவும், எல்லா சக்திகளின் ஐக்கியத்திற்கும் பாடுபடும் மிக முக்கியமான கடமையை ஆற்றுகின்றன.



சோவியத் யூனியனில் ஆடவரும் அரிவையரும் ஆனந்தமாக மேதினத்தை கொண்டாடும் ஒரு காட்சி.

இன்று உலகச் சக்திகளின் சமநிலை தீவிரமாக மாறியுள்ளது. சோவியத்யூனியன் இதரசோஷலிச நாடுகளைக் கொண்ட உலக சோஷலிச அமைப்பு, இன்று சர்வதேச நிகழ்ச்சிகளின் சக்திமிக்க செல்வாக்கைப் பிரயோகிக்கிறது.

# நீதிமன்றத்தை திணறடித்தவர்!

அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவம் வளர்த்த புலவர். அவர் ஒரு நாள் மாலை ஏழரை மணியளவில் சென்னைக் கடற்கரையில் உலவிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே ஒரு வீட்டில் திடீரென தீப்பற்றிக் கொண்டது.

இச் சம்பவம் காரணமாக பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்றது. மேற் கூறப்பட்ட புலவர் சாட்சியாக நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டார். அப்பொழுது நீதிபதி புலவரிடம் "தீ விபத்து நடந்த போது எத்தனை மணியிருக்கும்? நீங்கள் அப்போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டார்.

அந்த நம்புலவரவர்கள் தூய்மையான உயர்ந்த ஆங்கில மொழியில் விடை கூறினார். அவர் ஆங்கிலத்தில் விடை கூறுவதை நீதிபதி அவர்கள் விரும்பவில்லை. புலவரைத் தமிழிலேயே விடை கூறுமாறு பணித்தார். புலவர் அவர்களுக்குச் சினம் வந்து விட்டது. அழகு தமிழில் "அஞ்ஞான்று எல்லி எழ நாழிப் போதின் வாய் ஆழிவரம் பணித்தே காலே நூறுக் கலெசட்டப் புக்குழி" என்று விடை சொன்னார்.

புலவரவர்கள் இப்படிச் சொன்னதும் நீதிமன்றத்தில் நீதிபதியுட்பட எல்லோரும் திகைத்து விட்டனர் ஏனெனில் யாருக்கும் அவர் பேசிய தமிழ் புரியவில்லை. இந் நிலையில் மொழிபெயர்ப்பாளரின் நிலை ஆகப் பரிதாபகரமாகப் போய்விட்டது. காரணம் அவர்தான் புலவரவர் பேசியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நீதிபதி அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.



இப்படியாக சென்னை நீதிமன்றத்தையே திணறடிக்கச் செய்தவர் யார் தெரியுமா? அவர்தான் நல்லைநகர் தந்த சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுகநாவலர் அவர்கள்.

நாவலர் கூறிய விடையிதுதான் "நான் கடலோரத்திலே காற்று வாங்கிய வாறு உலாவச் சென்றேனாக. அன்று சூரியன் வானத்தில் எழுந்து நான்கு நாழிகை இருக்கும்" என்பதுதான்.

காவலூர்
க. சிவகாருண்யம்

இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் நாடியோட்டங்களை கவனித்து ஒருவருடைய நோயின் தன்மைகளைப் பற்றி ஆருடம் சொல்லும் முறை தமிழரிடையே இன்னும் நிலவி வருகிறது. நோயைப் பற்றி அறிய வந்தவர் ஆணா, பெண்ணா எப்பக்கத்தில் நின்று கேட்டார். என்ன நாடி ஓடும் போது வந்தார் முதலிய குறிகளைக் கொண்டு நடக்கப் போவதை முன்னமே சொல்லக் கூடியவர்கள் இன்னும் இருக்கிறார்கள். பாம்பு தீண்டியவருக்கு வைத்தியம் தேட வந்தவர் எப்படிப் பட்டவர் எந்நிலையில் வந்தார் எத்திக்கில் நின்று பேசினார் என்ன பேசினார் என்ற குறிகளைப் பார்த்தே விஷத்தை எடுக்கலாமோ முடியாதா என்றும் என்னபாம்பு கடித்ததென்றும் சொல்ல வல்ல விஷ வைத்தியர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

## சிந்தனைப்பேழை

இயற்கையாக நிகழும் மிகச் சாதாரணமான சம்பவங்களிலும் சிலர் குறி பார்ப்பார்கள். மற்றவர்களுக்கு அவை சாதாரண சம்பவங்களாகவே இருந்துவிடும். பல்லி சொல்லுதல், காகம் கரைதல், தும்மல் முதலிய சிறு சம்பவங்களிலிருந்து வரப்போவதை அறியலாமென்று கூறுவோர் எல்லா நாடுகளிலும் இருக்கிறார்கள். சிலருக்கு சகுனங்களில் நம்பிக்கையுண்டு. சிலருக்கு இல்லை. சகுனங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் அவற்றை கவனிப்பார்கள். இல்லாதவர்கள் கவனிக்க மாட்டார்கள்.

சகுனங்கள் பின்னால் நடக்கப்போவதைக் காட்டும் அறிகுறிகளே. அன்றி, அவை ஏற்பட்ட படியால் தான் அச்சம்பவங்களே நிகழ்ந்தன என்று நினைப்பது தவறு. ஒருவர் நல்ல காரியத்துக்கு போகும் போது ஓர் அமங்

1930-ம் ஆண்
அவர் போர்னியோ
விஜயம்செய்தார்.
பம் அத்தேசம்
நோயின் ஆதிக்கத்
லாகி [சொல்லொ
துன்பங்களை அனு
வந்தது. நாள்தோறு
லாயிரக்கணக்கானோ
ரியா நோயினால் ப
பட்டு உயிரிழந்த
காலமது. மக்களின்
உறிஞ்சி எடுத்து
ரியா நோயைக்கொ
நுளம்பின் சிறு பு
மிக நுணுக்கமாக
தறிய முற்பட்டார்

சிறையில் சீ
தாளாக நீரை
பேனுக் கூ
கொண்டு செ

ஜோன்மக் ஆர்தர்.
விஞானசச் சென்
வாராய்ச்சிகள் செய்
ருக்கி மிகச் சிறிய
நுண்ணோக்கிக்கருவி
பட்டது. எங்கும் தே
தார். கிடைக்கவில்லை

நுண்ணோக்கி
கருவியை...

இந்த நுண்ணோக்
கியைத் தாமே
வென்ன என்ற எ
அவர். சிந்தனையுட
விடாது செயலிலும்
ஞர் ஆர்தர். பல
களின் பின் 1938-ம்
டில் இவர் ஒரு
மான நல்லதொரு
ணோக்கிக்கருவியை
விட்டார். இதனைக்
இவர் போர்னியோ

'கண்
விண்

ஆகிய நோய்
ஆறு மென்
சோகமிலும்
தொலையாது
தோகை சில
சுடுதழல் நா
ஏகிடுங்கா
எழில் வான

# மினி கருவியினுல் உலகப்புரட்சி செய்த மாமேதை

1930-ம் ஆண்டளவில் ...

## சிறையில் சிகரெட் பெட்டியே எழுது ளாக நீரையே மையாக மொட்டைப் பேனுக் கூரே எழுது கோலாகக் கொண்டு செய்த ஆய்வின் பலன்...

சிறைப்பட்டார்

நுண்ணேக்கி ... வியை...

எப்படிப் பிரயோகிக்கலாம் இதனைப் பாவிப்பதன் மூலம் எவ்வளவு விசித்திரமான பலனைப் பெறலாம் என மனதிலேயே விரிவாக ஆராய்ந்தார்.


சிறைக்கைதிகளுக்கு கடதாசியோ அல்லது எழுதுவதற்கு பேனு, பென்சில்களோ கொடுக்கப்படுவதில்லை. வைத்தியர் மற்றச் சிறைக் கைதிகளுடன் அனிவகுப்புக்குச் செல்லும்பொழுது நிலத்தில் வீசிக்கிடக்கும் வெற்று சிகரெட்பெட்டிகளை ...

பற்றிய தனது அபிப்பிராயங்களையும் வெகு அழகிய எழுத்திற் சற்றேனும் பிழை விடாமல் எழுதினுர் வைத்தியர். பல இன்னல்களுக்கிடையே பலத்த காவல்களின் மத்தியில் தம் உள்ளரையும் திரணமாக மதித்து எழுதினுர் இவர்.

கருவியை மீட்டார்

இருப்பினும் அதிர்ஷ்டம் இவர் பக்கமே இருந்தது. அவுஸ்திரேலியர்கள் வந்து சிறைக் கைதிகளை மீட்கும் வரை உயிர் தப்பியிருந்த மிகச் சிலரில் இவரும் ஒருவராக இருந்தார். தன்னை விடுவித்த அவுஸ்திரேலிய அதிகாரியிடம் தனது நுண்ணேக்கி கருவி பற்றிப் பிரஸ்தா...

## ... சந்திரனில் ஓர் ஆய்வுகூடம் அமைக்கப்பட்டால் அங்கு என் கருவியும் இடம் பெறும்...' என்கிருர் ஆர்தர்.



டாக்டர் ஜோன் மக்ஆர்தர், தான் அமைத்துள்ள 'மினி' நுண்ணேக்கிக் கருவிமூலம் பரிசோதனை நடத்துகிருர்.

...யும் காகிதத் துண்டுகளேயும் சேகரித்தார். இதேபோன்ற ஓர் உடைந்த பேனு முனையையும் எடுத்துக்கொண்டார். ஒருநாள் ஜப்பானிய சிறை அதிகாரியின் வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. வைத்தியர் யாருக்கும் தெரியாமல் தான் எழுதிக்கொண்டிருந்த பென்சிலின் முனையை வேண்டுமென்றே உடைத்தார் பின் அம்முனையைத் தீட்டிக்கூராக்க பிளேட் தரும்படி கேட்டார். பிளேட் கிடைக்கவே பென்சிலைச் சீவிச்சீவி அதன் சாயத்தை மெதுவாக முறித்து முறித்துத் தம்மைகளுக்குள் போட்டுக்கொண்டார்.

இப்பொக்கிஷங்களுடன் தன் சிறைக்கூடத்திற்கு வந்தார் வைத்தியர் தமக்குக் குடிக்கக் கொடுக்கப்பட்ட நீரில் பென்சிலின் சாயத்தைக் கரைத்து மை செய்தார். வெற்று சிகரெட் பெட்டியின் உட்புறம் இம்மையில் தோய்த்த உடைந்த பேனு முனையால் தன் எண்ணங்களையும் நுண்ணேக்கிக் கருவி ...

...பித்தார் வைத்தியர். அவ்வதிகாரி ஜப்பானிய சிறையதிகாரியின் வீட்டிற்குச் சென்று துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி அந்நுண்ணேக்கிக் கருவியை மீட்டுக் கொடுத்தார். ஆனுல் அக்கருவி பாவிக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

தாயகம் திரும்பினுர் வைத்தியர். தான் சிறைக்கூடத்தில் எடுத்த குறிப்புகளையும் மற்றும் கணிப்புகளையும் கொண்டு மீண்டும் ஒரு சிறிய நுண்ணேக்கிக் கருவியை அமைத்தார். இலகுவாக எங்கும் எடுத்துச் செல்லக்கூடியதும், உறுதியாய்த் தரமாக இருந்தது இக்கருவி வழமையான நுண்ணேக்கி கருவியின் அளவிலும், தோற்றத்திலும் இது முற்றிலும் மாறுபட்டதாகும்.

இதனை ஒரு மனிதனின் கைக்குள் வைத்து மூடிவிடலாம். அவ்வளவு சிறியது. விமானத்திலிருந்து தரையில் வீசிவிடலாம். உடையாது அது அவ்வளவு உறுதி

(8-ம் பக்கம் பார்க்க)

# 'கண்டவர் விண்டிலரே, விண்டவர் கண்டிலரே'

ஆகிய நோய் புருடர்க்கு புருடர் கேட்கில்
ஆறு மென்க மாதர்க்கு மாதர் கேட்கில்;
சோகமிலிம் முறை தப்பிற் பொல்லாதென்க;
தொலேயாது நாட்சென்று மீறுமென்க;
தோகை சில நாட் செலுநீர் கடுகு மீளும்;
சுடுதழல் நாள்மூன்று தப்பிற் றுஞ்சப் பண்ணும்;
ஏகிடுங்கா ருமிரண்டின் மிகுந்தாற் கொல்லும்;
எழில் வான மன்று தப்பி லிறக்கும் பின்னே;

...ம் நிகழ்ந்தது. காரியம் ... பண்ணுகிறது? ஒரு விஷயத்தைப் பற்றி நினைக்கும்போது சடசடவென்று பல வி... சொன்ஞல் அது சகுனத்தடை என்று சிலர் கருதுவார்கள். ...

வி. என். பி.

## சாசனவியல் என்றுல் என்ன?

"இந்திய வரலாற்றை நோக்கும்போது சாசனவியல் தொல்பொருளியலின் கிளையாக அன்றி அடிமரமாகவே மிளிர்கிறது"
— கலாநிதி ஜி. எஸ் காயா

மனிதன் தோன்று தொட்டுத் தன் சமகாலத்தவரும் பிற்காலத்தவரும், தனது அபிலாஷைகள் சிலவற்றையோ, பலவற்றையோ அறியும் முகமாக விட்டுச் சென்ற கலைச் செல்வங்களிலே சாசனங்களும் இடம் பெறுவன. சாசனங்கள் மண், கல், பொன், வெள்ளி, இரும்பு, வெண்கலம், செம்பு முதலிய உலோகங்களிலே பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு என்பது கல்லிலே வெட்டப்பட்டன. பொறிக்கப்பட்டனவற்றையே ... வினர்களைக் காண்பது தரி... நிமிர்த்தம் என்பது இதன் பொருள்.

கிராமப்புறத்து வைதீகர்கள் பறவை பிராணிகளின் நடமாட்டம், இயற்கைஒலிகள் முதலியவற்றில் தன்னிமித்தங்களையும் துர்நிமித்தங்களையும் காண்பார்கள். இவை யாரால் எப்படி இயற்றப்படுகின்றன என்பது எவருக்கும் தெரியாத மர்மம். ... வண்டவர் விண்டிலரே. ...

...தும் ஆறுல் சாசனம் என்பது கல் பட்டுமன்றிப் பிற பல பொருட்களிலே பொறிக்கப்பட்டுள்ளவற்றையும் குறிக்கும். இவற்றைப் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவு ஆராய்ச்சியே சாசனவியல் எனலாம். சாசனவியல் தொல்பொருளியலின் ஒரு பிரதான கூறுகும்.

பெரும்பாலானவை தமிழ் நாட்டிலே கி. மு. இரண்டாம் நூற்றாண்டு தொட்டுக் கி. பி. 18-ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தனவாகக் காணப்படுகின்றன. 1968-ம் ஆண்டு வெளிவந்த தமிழ்ச் சாசனவியல் பற்றிய கட்டுரை ஒன்றின்படி தமிழ் நாட்டிலே சுமார் 22, 000

வி. சிவசாமி எம். ஏ.
(செயலாளர் யாழ். தொல்பொருளியற் கழகம்)


### தமிழ் நாட்டில் 22,000 சாசனங்கள்

உலகின் பலபாகங்களிலும் சாசனங்கள் கிடைத்துள்ளன. தமிழ் மொழியிலே ...

சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவாகவும், அவற்றிலே பெரும்பகுதி தெளிவாகப் பிரதி செய்யப்பட்டுப் பிரசுரிக்கப்படவில்லை எனவும் அறிகிறோம் ...

(10-ம் பக்கம் பார்க்க)

# சோவியத் மாதருக்கு அளிக்கப்படும் சலுகைகள்



'சமூக வளர்ச்சியில் பெண்கள் நேரடியாகப் பங்கு பற்றுவதைப் பொறுத்தே சோவியத் ராஜ்யத்தின் வளர்ச்சியும், அதன் வலிமையும் அதிகரிப்பும் இருக்கும் என்று அரை நூற்றாண்டுக்கு முன் வி. ஐ. லெனின் கூறினார். இன்று சோவியத் சமுதாயத்தினது பொருளாதார ப் பொருளாதாரத்தில் பணியாற்றுகின்றனர்.

### சட்டம் தரும் சலுகைகள்

பெண்களின் உழைப்பைப் பாதுகாக்கச் சோவியத் சட்டம் விசேஷ விதிகளை இயற்றியுள்ளது. மிகக்கடுமையான சுகாதாரக்குறைவான வேலைகளில் பெண்களின் உழைப்பு

— அலெக்ஸாண்ட்ரா பிரியுகோவா —

ஆன்மீகசம்பத்துக்கள் அரைவாசிக்குமேல் மாதர்களின் கரங்களால், அவர்களின் அறிவு, ஆற்றல், திறனால் சிருஷ்டிக்கப்படுகின்றன. வேலை செய்யக்கூடிய பெண்களுள் 80 சதவீதத்திற்கும் அதிகமான அரிவையர்கள் தேசி உபயோகிக்கப்படுவதை சோவியத் சட்டம் தடை செய்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உடைய பெண்கள் இரவு ஷிப்டுகளிலும் ஓய்வு நாட்களிலும் வேலைக்கமர்த்தப்படுவதை அது தடுக்கிறது. எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உடைய பெண்களை அவர்களின் சம்மதமின்றி மேலதிக வேலை செய்யுமாறோ அல்லது வேலை சம்பந்தமாக வெளியூர்களுக்குச் செல்லுமாறோ நிர்வாகத்தால் நிர்ப்பந்திக்கமுடியாது.

### பெண் உழைப்பை..

சோவியத் யூனியனில் ஏறத்தாழ 400 விஞ்ஞான நிலையங்களும், ஆய்வுகூடங்களும் திணைக்களங்களும் உழைப்புப்பாதுகாப்புப் பிரச்சினைகளை ஆராய்கின்றன. இவை ஒவ்வொன்றும் பெண் உழைப்புப்பற்றிய பிரிவையும் கொண்டுள்ளன. அத்துடன் மாதர் உழைப்பு பாதுகாப்புக்கான விசேஷ நிலையம் ஒன்று மாபெரும் நெசவுக்கேந்திரமான இவனோவில் நிறுவப்பட்டுள்ளது.

கமர்த்த மறுப்பதோ அல்லது வேலையில் இருந்து நீக்குவதோ கடும் குற்றமாகச் சோவியத் யூனியனில் கருதப்படுகிறது. குழந்தை பெறவிருக்கும் அல்லது பெற்ற தாய்மார்களுக்கு இலகுவான வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இதற்

நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது. இது கடந்த வருடத்தில் 7900 லக்ஷம் ரூபிள்களாக இருந்தது.

ஆடவர் பெண்டிர் இருபாலாருக்கும் சமசம்பளம் சமவேலை என்ற விதி சோவியத் யூனியனில் என்றோ பிரபலமாகிவிட்டது.

தொழிற் சங்கங்களின் அனைத்து யூனியன் மத்திய சபையின் நிர்வாகிகளில் அரைவாசிக்குமேலானோர் பெண்களே. இன்றுள்ள பெருந்தொகையான பெண்கள் தொழில்துறையில் உயர்பதவிகளை வகிக்கிறார்கள். ஐந்து லக்ஷத்திற்கு அதிகமான பெண்கள் தொழிலகங்களினதும் அரசாங்கப் பண்ணைகளினதும், நிர்மாணத் தலங்களினதும், நிலங்களினதும் இயக்குநர்களாகப் பணியாற்றுகிறார்கள்

★ உழைப்பை பாதுகாக்க சட்டம்

★ தாய்மைப் பாதுகாப்பு பணி

★ சமவேலை சமசம்பளம்

★ தொழில்துறையில் உயர் பதவி

### தாய்மைப் பாதுகாப்பு

சோவியத் ராஜ்யம் பெண்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொடுக்கத் தவறுவதில்லை. தாய்மைப் பாதுகாப்புப் பணிகளை அரசே முற்றாகப் பொறுப்பேற்றுள்ளது. இதற்காகப் பிரசவ விடுதிகளையும், சிறுவர் நிலையங்களையும் தாய்மார்-குழந்தைகள் ஆலோசனை நிலையங்களையும் நடத்துகிறது.

கர்ப்பமுற்றுள்ள தாய்மார்களினதும் நலன்கள் முற்றாகப் பாதுகாக்கப்படுகின்றன. கர்ப்பமுற்றமைக்காக ஒரு பெண்ணை வேலைக் சம ஊதியம் எள்ளளவேனும் குறைக்கப்படுவதில்லை. உழைக்கும் தாய்மார்களுக்கு குழந்தைப் பேற்றுக்கு முன் எட்டுவாரங்களும். பின் எட்டுவாரங்களும் விடுமுறை கிடைக்கிறது. இதற்கான செலவு ராஜ்ய காப்புறுதி

---

சமையல்

## கார அப்பம்

**தேவையான பொருட்கள்:**

பச்சை அரிசி — 1/4 படி
புழுங்கல் அரிசி — 1/4 படி
துவரம்பருப்பு — 1/2 படி
உழுந்தம்பருப்பு — 2 மேசைக்கரண்டி
பச்சை மிளகாய் — 10
வற்றல் மிளகாய்
சிறிது பெருங்காயம்
உப்பு — தேவையான அளவு
சிறிய தேங்காய் — 1
எண்ணெய் அல்லது நெய்

**செய்கை முறை:** —

அரிசியைக் கழுவி, ஊறப்போட்டு அரைக்கவும். பருப்புகளையும் ஊறப்போட்டு அரிசி ஓரளவு அரைபட்டபின்னர் அதனுடன் கலந்து உப்பு, பெருங்காயம் மிளகாய் எல்லாவற்றையும் அரிசியோடு சேர்த்து அரைக்கவும். தேங்காயையும் உடன் சேர்த்து அரைத்துக்கொள்ளவும். அரைத்த மாவுடன் புளித்த மோர் சிறிதுவிட்டு கலந்த பின்னர் எண்ணெய் சட்டியை அடுப்பில் வைத்து கரண்டியால் எடுத்து சிறிது சிறிதாக ஊற்றி வெந்ததும் எடுத்து ஆறியபின் பரிமாறலாம்.

— வசந்தா ராஜகோபால்

---

குடும்பச் சுடர்

தயாரிப்பு குணம்

---

# ★ திருமணச் சடங்குகள் தரும் தத்துவம்! ★

இந்துக்கள் திருமணச் சடங்கிருக்கிறதே. அதி மிக வேடிக்கையான பல நிகழ்ச்சிகளைக் கொண்டமைந்தது. அம்மி மிதித்தல், மாலைமாற்றல், தாலி கட்டுதல் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவற்றைப் பார்க்கும்சிலருக்கு இன்று அவை நாடகம் போலவும் வேடிக்கை நிகழ்ச்சிகளாகவும், வெறும் சம்பிரதாயங்களாகவும், மூடக்கொள்கைகளாகவும் தோன்றலாம். ஆனால் இந்நிகழ்ச்சிகளுக்குப்பின்னால் பெரும் தத்துவங்களே மறைந்து காணப்படுகின்றன.

### தாலி கட்டுதல்

முதலாவதாக தாலி முடித்தலை எடுத்துக்கொள்ளுங்கள். தான் வேறு நீ வேறல்ல தான் நீ 'தாலி' என்ற சொல்லே தாலி என்று மருவியது. இதில் முதல் முடிச்சு பிரம்ம மந்திரம். இரண்டாவது முடிச்சு சிவ மந்திரம். ஒன்பது இழை சேர்ந்த நூலில் தாலியைக் கோர்த்து, குடும்பவாழ்க்கைப்பட மார்பின் அளவு பார்த்து, அக்காள் தங்கைகளும் தானும் சேர்ந்து முடிந்த அந்தப்பெண்ணை தங்கள் இல்லத்தரசியாக ஏற்றுக்கொள்ளும் பணி. பொன் வெள்ளி போல் மாசற்று வாழவே பொற்றாலி.

### மாலை மாற்றல்

சாஸ்திரங்கள் ஒருவர் அணிந்த மாலையை மற்றொருவர் அணிக்கூடாதென்று கூறுகிறது. ஆனால் இரு உடல் ஒருயிராகப் போகும் தம்பதியர் இம் மாலையை மாற்றிக்கொள்வது வாயிலாக ஒருயிராகின்றனர்.

மூன்றுமுறை ஒன்றைக் கூறினாலும், செய்தாலும் அது உறுதியாகிவிடுகின்றது பின்னர் அதை மாற்ற முடியாது. மணமகன் மணமகள் இருவரும் ஒன்றுபட்டு, மனத்தளவில் கூட வேறுபாடின்றி வாழவேண்டும் என்பதையே மூன்று முறை மாலை மாற்றல் உணர்த்துகிறது.

### அம்மி மிதித்தல்

கற்பு வரம் வாங்குவதே அம்மி மிதித்தல் சடங்கின் கருத்தாகும். ஹோமத்தீயை வலம்வந்து மனைவியின் காலைக் கணவன் பற்றி அம்மியின் மீது வைக்கவேண்டும்' கற்பு என்றசொல் 'கல்' என்ற சொல்லின் பகுதியையும் "பு" என்ற எழுத்தின் விகுதியையும் கொண்டதே கற்பு. இதற்குக்கல்லை ஏன் வைத்துக்கொள்ள வேண்



டும், ஏன் இரும்பை வைத்துக்கொள்ளக்கூடாது? பாரம் அதிகமானால் இரும்பு வளையும். ஆனால் கல்லோ வளைந்து கொடுக்காது பிளந்துவிடும்.

### ஊஞ்சல்

அடுத்து இன்று மணமக்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டும் சடங்கு அருகி வந்தாலும் இதுவும் இந்துக்களின் பண்டைய மணமுறையில் முக்கிய அம்சமாக இருந்து வந்திருக்கிறது. தம்பதியரை ஊஞ்சலில் உட்கார வைத்துப்பாடுவது வேடிக்கையல்ல.

மேலே இருந்து தொங்கும் ஊஞ்சல் சங்கிலி, கடவுளிடமிருந்து பூமியில் இப்பிறவியைப் பெற்றிருக்கிறோம் என்பதை உணர்த்துகிறது. ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வது நமது வாழ்க்கையின் போக்கு. சஞ்சலமான ஊஞ்சலின் இயற்கையான அசைவற்ற நிலைபோலத் தம்பதியர் மனத்தைப் பண்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

### பாலிகை

திருமணம் நன்கு நடைபெறத் தேவர்களின் தயவு வேண்டும் வாழ்க்கை நன்கு அமையவும் அவர்கள் தயவு வேண்டும். 5 பாலிகைகளில் திக் பாலகர்களை ஆவாகனம்செய்துவழிபடப்படுகிறது.

இப்பாலிகைகளின் அடியில் அறுகம்புல், வில்வமிலை. இவைகளை வைத்து சுத்தமான மண்ணை அவைகளை நிரப்பவேண்டும். நெல், உழுந்து, கொள்ளு, பச்சைப் பயறு, எள்ளு இவைதான் பாலிகைத் தானியங்கள். இவைகளைச்சிறிதுமுன்பே ஊறவைத்து மணமகள் பாலியில் போடவேண்டும். பின்னர் 5 சுமங்கலிகள் விதைகளைத் தெளிக்க வேண்டும். இந்தச் சுமங்கலிகள் குழந்தைகள் உள்ளவர்களாயிருக்க வேண்டும் திருமணம் முடிந்து ஒற்றைப்படை நாளில் பாலிகைகளில் விளைந்தவைகளை ஆற்றிலோ அல்லது குளத்திலோ போடவேண்டும்.

இவ்வாறு திருமண நாளன்று நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் பின்பும் கருத்தாழமிக்க நல்ல தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றன.

## முதலாம் பாகம்

## (24)




# போராடப் பிறந்தவர்கள்

—செங்கை ஆழியான்—

பாக்கியலட்சுமியை ஒவ்வொரு நாளும் கவலைகள் சூழ்ந்துகொள்ளும். அக்கவலைகள் தன்னைப்பற்றிய கவலைகளாகவே இவ்வளவு நாளும் அவளுக்கு இருந்துள்ளன. 'நல்ல சேலையில்லை, நகையில்லை, கார் இல்லை, படம் ஓயாது பார்க்கப் பணமில்லை' என்ற கவலைகள்தாம் பெரும்பாலானவை.

நாலைந்து நாட்களாக அவள் ஏனோ தனது பிள்ளைகளது நிலையை எண்ணிக் கவலைப்படத்தொடங்கி இருந்தாள். தனது பிள்ளைகள் யாவரும் ஒவ்வொரு திக்கில் தமது எண்ணப்படி செழிந்துபோனால், அதன் பிரதிபலிப்பு தனக்கும் உரியது என்று கருதத் தொடங்கினாள். ஐயாத்துரையின் மேற்பார்வையில் ஒருமிதமாகக் குடும்பம் சீராக ஓடியபோது ஒன்றுக்கும் கவலைப்படாத அவள், அடுத்தடுத்து நிகழ்ந்துபோன சம்பவங்களால் இடிந்து போனாள். தாய்மை உணர்வை எந்தவொரு தமிழ்ப் பெண்ணும் மறைத்து ஒதுக்கிவிட முடியாது.

கணபதிப்பிள்ளை மாஸ்ரர் கூட அவளுக்கு அடிக்கடி கூறியிருக்கிறார். "இதோ பார் பாக்கியம்... நீ குடும்பத்தைப் பொறுப்பேற்று நடத்த வேணும்! நீ உனது போக்கில் திரிகிறாய்...! அது கூடாது. தாய் கவனிக்காவிடில் குழந்தைகள் உருப்படாது. சீர்கெட்டுப்போய்விடும்! நீ இப்ப குழந்தைகளை நன்றாக வழிநடத்திக் கவனிக்காவிடில், கடைசிக் காலத்தில் அவை உன்னைக் கவனிக்காமல் விட்டுவிடும்..."

அப்போது இதைக்கேட்டு அவள் சிரித்திருக்கிறாள். இப்போது அவற்றில் உண்மை இருப்பது புலனாகிறது. இராசம்மா இரகசியமாக மகேஸ்வரியைப் பற்றிக் கூறிய செய்தி வேறு அவளைக் கலக்கத்துக்குள்ளாக்கிவிட்டது.

சிவராசாவைப் பொலிசார் 'திருட்டுக் குற்றம் சாட்டிப்பிடித்துச் சென்ற வேளையே பாக்கியலட்சுமிக்குக் கலக்கம் பிடித்துக்கொண்டது. அக்கலக்கம் ஐயாத்துரை தனது விருப்பப்படி எவளோ ஒருத்தியைக் கலியாணம் செய்துகொண்டதும் கூடிவிட்டது. கூடிய அக்கலக்கம் இராசம்மா கூறிய சங்கதியோடு உச்சமாகிவிட்டது. இராசம்மாவும் எத்தனை சத்தியத்தைத் தன்னிடம் வாங்கிக்கொண்டு கூறினாள்.

"பாக்கியம், உன்னோடு நன்றாய்ப் பழகினதாலை இந்த விசயத்தை உனக்கு மறைக்க எனக்கு விருப்பமில்லை. சத்தியமாகச் சொல்லுறன் மகேஸ்வரியை இப்படியே வயதேற விட்டு இருப்பது நல்லதில்லை..."

அதுதான் கலியாணம் பேசப்படுகிறதே... சின்னத்தம்பிக்கு முற்றாகியும் விட்டது.

இராசம்மா பாக்கியத்தைக் கவலையோடு பார்ப்பதுபோலப் பார்த்தாள்.

"அதையே கெதியாகச் செய்யச் சொல்லுறன்..."

"ஏன்...? ஏன்...?"

இதற்குப் பிறகுதான் இராசம்மா பாக்கியத்திடம் சத்தியங்கள் கேட்டாள். அதன் பின்பே விபரத்தைக் கூறினாள், பாக்கியம் திகைத்துப் போனாள்.

"இராசம்... நீ பொய் சொல்லவில்லையே? உண்மையாக மணியமும் மகேஸ்வரியும் வேலியடியில் நின்று பேசினதைக் கண்டாயா...?"

"உந்த வீரபத்திர ரசாலைக் கண்டனான்..." என்றாள் இராசம்மா.

மகளைக் கூப்பிட்டு இதைக் கேட்பதா? கணவனிடம் இதைக்கூறி மகளைக் கண்டிக்கச் செய்வதா? நீண்ட யோசனையின் பின் முதல் வழியே சரியாக அவளுக்குப் பட்டது.

விசாரிப்பதற்கு முன் மகேஸ்வரியின் நடவடிக்கைகளைக் கவனித்து முடிவு செய்வது அவளுக்கு நல்லதாகப் பட்டது. மகேஸ்வரி கிணற்றடிக்குப் போகும் வேளைகளில் அவதானித்தாள்.

கிணற்றடியில் நின்று மகேஸ்வரி அடிக்கடி மணியம் வீட்டைப் பார்ப்பதை அவள் கண்டு திடுக்குற்றாள். மகேஸ்வரி மணியம் நிற்கிறானோ என்ற பயத்தோடு பார்க்க, பாக்கியம் மணியம் நிற்கிறானோ என்ற விருப்போடு பார்ப்பதாக நினைத்தாள். கண்களும் பொய் சொல்லும் என்பதைப் பாக்கியம் உணரவில்லை. கேட்பதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் குமைந்தாள் பாக்கியம்.

தரகர் கந்தையா, ஐயாத்துரை வீட்டிற்குப் பல தடவைகள் வந்துபோனார். சின்னத்தம்பியின் சாதகமும் மகேஸ்வரியின் சாதகமும் நன்கு பொருந்தின.

நாளை கிராமிலேயேவைப்பம்' என்று அவசரப்படுத்தி

## நேற்று

ஊர் தரகர். சிவராசாவைக் களவு சம்பந்தமாகப் பிடிச்சுக்கொண்டு போனதற்காகப் பொடியன் மிகவும் கவலைப்படுகிறான்! நீரும் அதை மனதில வையாதையும்..."

"சின்னத்தம்பியில என்ன பிழை? முத்துச்சாமி செய்த வேலைக்கு...! சின்னத்தம்பியிட்டை சொல்லும் பெரிசாச்செய்வதற்கு என்னிடம் வசதியில்லை..."

"நீர் கவலைப்படாதையும்... சின்னத்தம்பிக்கும் பெரிசாகச் செய்யவிருப்பமில்லை - சுருக்கமாகத்தான் செய்யவிருப்பம் ... வருகிற வெள்ளிக்கிழமை நல்லநாளிருக்கு. புதன்கிழமை கச்சேரிக்குப்போய் எழுதுவம்.. சரியே ஐயாத்துரை...?"

"எல்லாம் சரிதான் கந்தையா... ஆனா......?"

"செலவுக்குத்தானே...? அப்படி ஒரு இருநூறு முந்நூறு மாறமாட்டியே?"

என்று உண்மையிலேயே ஐயாத்துரையின் உள்ளத்தில் மகிழ்வு பூரணமாக நிறைந்திருந்தது.

வயதுவந்த தனது குமரி ஒன்று கரைசேரப்போவதை எண்ண எண்ண அவருக்குக் களிப்பாக இருந்தது.

அந்த வீட்டில் மகேஸ்வரியைத் தவிர ஏனையவரும் மகிழ்ச்சியில் மிதந்தனர். மகேஸ்வரியின் மனநிலையை அறியமுடியாததாக இருந்தது. அவளால் சின்னத்தம்பியை வெறுக்கவும் முடியவில்லை, வேறொரு அப்பாவித்தனமான முகம் ஒன்று அவளது மனக்கண்களில் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது.

"இத்திருமணம் தனக்கு அவசியம் தானா?" என்று அவள் அடிக்கடி கேட்டுக்கொண்டாள். விடை குழப்பமாகவே இருந்தது. எல்லாரையும் விட்டுவிட்டுத்தான் போவதா?

"அப்பு......"

ஐயாத்துரை மகளின் அழைப்புக்கேட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தார்.

"என்ன, பிள்ளை...?"

"எனக்கு இப்ப கலியாணம் செய்ய விருப்பமில்லை..."

அவர் கல கல வெனநகைத்தார்.

"விசர் பிள்ளை... காலமெல்லாம் எங்களோடை இருந்து கஷ்டப்படப்போறியா? இப்பவே உனக்கு வயதாகிவிட்டது... கலியாணம் வேண்டாமென்கிறாயே? சின்னத்தம்பி எவ்வளவு நல்ல பிள்ளை..."

தகப்பனுக்கும் மகளுக்கும் இடையில் நடக்கும் உரையாடலைப் பாக்கியம் கேட்டாள். 'இவளேன் கலியாணம் வேண்டாமென்கிறாள்?' பாக்கியத்தின் மனம் பலவித ஈர்க்கற்பனைகளைச் செய்துகொண்டது. எழுந்து தலைவாசலுக்கு வந்தாள்.

"கலியாணம் செய்தாலும் நான் உங்களை விட்டுப்போகமாட்டன் இங்கேயே இருப்பன்..."

மகேஸ்வரியை ஏக்கத்தோடு அவர் பார்த்தார். சற்றுப் பேசாது எங்கோவெறித்து நோக்கினார்.

பின் கூறினார்.

"உன்னைப்பிரிவது இங்கு எல்லாருக்கும் கஷ்டம்தான் பிள்ளை! ஆனா, சின்னத்தம்பி இங்கை இருக்க விரும்பினாலும் உங்களை இங்கை இருக்க நான் அனுமதிக்கமாட்டன். எப்படி எப்படியோ எல்லாம் வாழ நீங்கள் ஆசைப்படுவீர்கள்! அதற்கு இந்த வீடு ஏற்றதல்ல... சின்னத்தம்பி ஓரளவு வசதியானவன்! அவனையும் எங்களோடு சேர்த்துவிடுவது நல்லதல்ல... தனி வீடு எடுத்துக் குடும்பம் நடத்துவதுதான் எல்லாத்துக்கும் நல்லது... தூரம் துலைக்கப் போகிறாய்...?"

மகேஸ்வரியால் எதுவுமே பேசமுடியவில்லை. கைவிரலால் தூணைச் சுரண்டியபடி நின்றாள்.

"அப்பு..." என விளித்தாள். "இப்ப செலவுக்கு எங்கை போவியள்... முன்னூறு நானூறு எவர் தருவார்கள்..."

ஐயாத்துரையும் அதனைக் குறித்தே தலையை உடைத்துக்கொண்டிருந்தார். உண்மையில் எவர் தருவார்கள்? இச்சிறிய தொகைக்காக ஒரு திருமணம் தடைப்படுவதா?

"நான் தாறன்..." என்றாள், பாக்கியலட்சுமி!" என்னை சங்கிலியை வித்தால் நானூறுக்குமேலை வரும்..." ஐயாத்துரை மனைவியை அளவில்லாத வியப்போடு பார்த்தார். 'அற்புதம் நிகழ்ந்துவிட்டது' என்று உள்மனம் கூறியது.

(வளரும்)

## சிறுகதை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் வரை, நான் அவனையே பார்த்தபடி புகைவண்டித் தளவருகில் நின்றேன்.

அவனது உருவம் மறைந்ததும், எனது சட்டைப் பையுள் இருந்த சிகரட் பைக்கட்டையும், நெருப்புப் பெட்டியையும் எடுத்து வெளியே எறிந்துவிட்டு என் இடத்திலே வந்தமர்ந்தேன்.

(அடுத்த மாதம் வெளியாகும் சொக்கனின் 'கடல்' கதைத் தொகுதிக்கென்று எழுதப்பட்டது.)

## சாசனவியல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏறக்குறைய 120 தமிழ்ச் சாசனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலே வெவ்வேறு காலத்திய 8 தமிழ்ச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. முறைப்படி தேடினால் மேலும் பல சாசனங்கள் கிடைக்கலாம். அரிய விடயங்கள் புலப்படலாம்.

சாசனவியல் மூலமாக எமது நாகரிக கலாச்சார நிலைகளைப் பற்றி அறியலாம். வரலாறு, மொழி, தொல்லெழுத்தியல் பிற தொடர்புகள் என்பனவற்றை அவற்றின் துணைகொண்டு நோக்கலாம். இந்தியா இலங்கை ஆகிய நாடுகளின் ஆதிகால மத்திய கால வரலாற்றினை அறிதற்கான பிரதான மூலங்களிலே சாசனங்கள் குறிப்பிடத்தக்கவை. 1969-ம் ஆண்டு கொழும்பிலே நடைபெற்ற ஆசியத் தொல்பொருளியல் மாநாட்டிலே பிரதம இந்திய சாசனவியலாளரான கலாநிதி ஜி. எஸ். காய் என்பவர் ''சாசனவியல் தொல்பொருளியலின் ஒரு கிளையாகச் சொல்லப்படினும், அசோகர் காலம் தொட்டு (கி. மு. 13-ம் நூ.) முஸ்லிமாட்சிக் காலம் வரையுள்ள (கி. பி. 13-ம் நூ) இந்திய வரலாற்றை நோக்கும் போது சாசனவியல் தொல்பொருளியலின் கிளையாக அன்றி, அடிநாதமாகவே மிளிர்கின்றது'' என இந்தியச் சாசனவியலின் முக்கியத்துவத்தினை வற்புறுத்தினார். இவரின் கூற்று ஈழத்துச் சாசனவியலுக்கும் ஓரளவு பொருந்தமாகும்.

தமிழ் மொழியின் பழைய நிலைகள், அதன் வளர்ச்சி, அதிலேற்பட்ட மாற்றங்கள் வட மொழிபோன்ற பிறமொழித் தொடர்புகள் முதலியவற்றை அறிவதற்கும் தமிழ்ச் சாசனங்கள் துணைபுரிகின்றன ஒருமொழியிலே காணப்படும் இலக்கிய வழக்கு பேச்சுவழக்கு ஆகிய இரு பிரதான வழக்குகளிலும் சாசன மொழி வழக்குப் பின்னைய வழக்குடனேயே பெரிதும் தொடர்புளதாம்.

தமிழ் எழுத்துக்களின் பண்டைய வரி வடிவங்கள் அவற்றின் வளர்ச்சி அதற்றிலேற்பட்ட மாற்றங்கள், அவற்றிற்கான காரணங்கள் இன்றைய எழுத்துக்களின் நிலை முதலியவற்றை தமிழ்ச் சாசனங்கள் மூலமாகவே இன்று அறியலாம். ''ஒரு மொழியின் வரிவடிவமும் பண்பாட்டின் ஒரு கூறே யாம்'' மேலைத்தேய விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட அச்சு யந்திரத்தின் உபயோகத்தினாலே எழுத்துக்களின்று மாற்றம் ஏற்படவில்லை. இந்தியாவிலே லிபி [வரி வடிவம்] மாற்றம் பற்றிய கருத்துக்கள் கூறப்படுகின்றன.

மேலும், மேனாட்டவர் குறிப்பாக ஆங்கிலேயர் தொடர்பின்மேலே தான் சாசனவியலின் முக்கியத்துவத்தினை எம்மவர் அறிந்தனர். இதற்கு வழிகாட்டியாக விளங்கிய பபிங்டன். பிரின்செப் பியூலர், பேர்ணல் பாணெற் முதலிய மேனாட்டறிஞரையும் கோபிநாதராவ் ஒஜா கே வி சுப்பிரமணிய ஐயர் ரீ. என். சுப்பிரமணியம் போன்ற இந்திய அறிஞரையும் குறிப்பிடலாம்.

இன்று ஈழத்திலும் இந்தியாவிலும் சாசனவியல் பயிலுவோர் தொகை குறைந்துவிட்டது ஆனால் அதனை கற்று செய்யவேண்டிய ஆக்க பூர்வமான தொண்டுகள் உள்ளன. எம்மவரிலே விருப்பமுள்ள சிலராவது கற்றுத் தேர்ச்சி பெறின் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிற் கூடச் சாசனவியலிலே தொண்டுபுரிய வாய்ப்புகள் உள. எம்மவர் மத்தியிலே சாசனவியல் பற்றிய ஊக்கத்தினை ஏற்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் தமிழ்ச் சாசனவியல் பற்றிய விரிவுரைகளையும், பயிற்சிகளையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி கா. இந்திரபாலா, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை முதலிய சாசனவியலாளர்களின் துணைகொண்டு ஒழுங்கு செய்துள்ளது. இவ்விரிவுரைகள் பயிற்சிகளின்பின், வசதியாயின் தமிழ்ச் சாசனங்களை எவ்வாறு பிரதி எடுத்துப் பிரசுரிக்கலாம் என்பது பற்றியும் நன்கு விளக்கப்படும்.

தம்பி அன் கோ.,
ஜுபிலி சேமிப்பிற்கு
(JUBILEE DEPOSITS)
ரூபா 1000/-க்கு வருடம்
ரூபா 125/-வட்டி கொடுக்கப்படும்.
ரூபா 500/-க்கு வருடம்
ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்
மறு விபரங்களுக்கு:-
தம்பி அன் கோ.,
வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

பள்ளத்திலேதான் தண்ணீர் ஓடுகிறது. தேங்கித் துர்நாற்றம் அடிப்பதில்லை. அதைப்போல் பணத்தைக் கையாளுங்கள். பணத்தைத் தேக்கி வைத்தும் அடைந்து நாற்றம் எடுக்கவிடாதீர்கள். தாராளமாக ஓடவிட்டு நலம் செய்யுங்கள். பணத்தை உங்கள் சேவகனாக அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதன் அடிமையாகி விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.



0 0 0

சத்திர சிகிச்சை வைத்தியர்கள், கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் என்ன செய்கிறார்கள்? கையையும் கத்தியையும் நன்றாகத் தொற்று நீக்கிக் கொண்டே வேலை ஆரம்பிப்பார்கள். அவ்விதமாகவே பொதுப் பணிக்கு முற்படுகிறவர்கள் முதலில் மனசை நன்றாகச் சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

—ராஜாஜி




# அமெரிக்காவில் தேர்த்திருவிழா

[தெய்வத்தையே நம்பி, கையில் ஒரு காசில்லாமல் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்திலிருந்து உலக யாத்திரைக்கு சுவாமி திலக மகராஜருடன் மலாயா வழியாகப் புறப்பட்ட ஜோதிசுவாமி, பலநாடுகளிலும் பஜனைசெய்து மத்திய அமெரிக்காவை அடைந்து குவாதிமாலாவிலிருந்து தமது யாத்திரை பற்றி எழுதிய கடிதம் இது.]

அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்னியாவில் பல நகரங்களுக்கும் சென்றபின் மெக்ஸிகோவுக்கு வந்துள்ளோம். கலிபோர்னியாவில் பல போக நிலையங்களுக்கும், தியஸாபிகல் சொசைட்டி முதலிய பல்வேறு கட்டடங்களுக்கும் சென்றோம். பலரும் உற்சாகமாக சுவாமி திலகரின் ஆழ்ந்த மொழிகளையும் பஜனைகளையும் கேட்டு இன்புற்றார்கள்.

ஒருநாள் மழைபெய்த போதிலும் 'ஹரே கிருஷ்ணா' சங்கத்தினரால் சிறப்பாக சைதன்ய மகாப்பிரபுவின் ஜயந்திவிழா கொண்டாடப் பெற்றது. அமெரிக்கா, கனடா நாடுகளின் பல பாகங்களிலிருந்தும் பர்க்கிலே எனும் நகரிலுள்ள விதானத்துக்கு வந்தார்கள். மழையானதால் ஊர்வலம் சாலையில் சிறிது நேரத்துக்கு நடந்தது. மாலையில் திரும்பவும் நடந்தது. மகாப்பிரபுவின் பிரம்மாண்டமான இலச்சினை ஊர்வலத்தில் கொண்டுபோனார்கள்.

இன்னும் ஒரு விசேஷ தினத்தில் பூரி ஜகந்நாதத்தில் நடக்கும் தேர்த்திருவிழா கொண்டாடப்பெற்

திருவருள் வேறு இருந்தது போலும். நல்ல அன்பர்கள் எங்களுக்கு மிகவும் துணையாக இருந்து சில இடங்களில் நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்தும், தங்குவதற்கு ஒழுங்கு செய்தும் உதவிய ஒரு ஜோதிட குடும்பத்தவர்கள் மெக்ஸிகோவுக்கு இரு வாரங்கள் போவதாகத் தெரிவித்தனர். நாங்களும் விசாரித்தபோது எங்களையும் அழைத்தனர்.

இது நல்ல தருணம் என்று எண்ணினோம். ஏனெனில் எங்களுக்கு ஸ்பானிஷ் மொழி தெரியாது. மெக்ஸிகோவில் ஒருவரும் அறிமுகமில்லை. மெக்ஸிகோ ஸ்தானிகராலயத்தில் விசாரித்தபோது பல நிபந்தனைகளைக் கூறினார்கள். அதற்காகப் பல நாட்களாயின. பின்னர் எங்கள் விசா மனுவைக் கொடுத்தோம். மூன்று நாட்கள் கழித்து வரச் சொன்னார்கள். அந்தினத்தில் அதைப் பார்வையிட்ட ஒருவர், கையெழுத்துக்கான அதிகாரியிடம் போனபோது மறுத்தார். இன்னும் இரு நிபந்தனைகளைத் தெரிவித்தார். அதில் ஒன்று முடியாதது. பின்னும் முயன்று பார்த்தும் பயனில்லை. ஆனால் வாஷிங்டனிலுள்ள

— ஸ்ரீ ஜோதி சுவாமி —

றது. மூன்று தேர்கள் இழுக்கப்பட்டன. அவர்களின் குரு சுவாமி பக்திவேதாந்தஜியும் இதற்காகவே வேறு நாட்டிலிருந்து வந்தார்கள். நானும் இதற்காகவே அங்கு ஒரு நாள் தங்கினேன். பின் சுவாமிஜியையும் எங்களையும் அழைத்துச் செல்லும் அன்பர்களையும் அடுத்த நாளில் சேர்ந்தேன். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து பஜனை செய்யும் பாக்கியம் பெற்றேன். பிரசாதங்களும் வழங்கப்பெற்றன. சிலஆண்டுகள் திருவிழாக்களை தரிசிக்க முடியாத குறையை இவை ஓரளவு தீர்த்தன.

அமெரிக்கா பூராவும் யாத்திரை செய்த பின்னரே வேறு நாடுசெல்ல எண்ணியிருந்தோம். ஆனால் முருகன் இலங்கை ஸ்தானிகருக்கு எழுதினேன். உடனேயே அவர் மெக்ஸிகன் ஸ்தானிகருடன் தொடர்புகொண்டார். சில நாட்களில் ஒரு மாத விசா கிடைத்தது. சுவாமியின் விசா நியூயார்க் அன்பர்கள்மூலம் நியூயார்க்கிலிருந்து கிடைத்தது.

இரு அன்பர்களுடன் காரில் மெக்ஸிகோவுக்குப் புறப்பட்டோம். மூன்று நாட்களுக்குப் பின் குவாடலஜாரா எனும் நகரத்தை அடைந்து அன்பர்களின் விலாசத்துக்குச் சென்றோம். அவர்கள் எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, எங்கள் தகவல் கிடைக்காதபடியால், அமெரிக்காவுக்கு அன்று காலை திரும்பிவிட்டார்கள். எங்கள் தந்தி மூன்று நாட்களுக்குப்பின், அவர்கள் புறப்பட்ட பின்னரே கிடைத்தது.

மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்வதற்கும் தங்குகிற வசதிக்குமாக பல சமயங்களைத் தேடிச்சென்றோம். பின் பல அன்பர்களைச் சந்தித்ததில் அவர்கள் கூட்டங்களுக்கும் தங்குவதற்கும் வசதிகள் செய்தார்கள். ஆனால் மூன்று நாட்களுக்குப்பின் மெக்ஸிகோ நகருக்குப் புறப்பட்டுவிட்டோம். அங்கும் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டோம். பின் முருகன் திருவருளால் எல்லா வசதிகளும் செய்யப்பட்டன. பல கூட்டங்கள் பல இடங்களில் நடைபெற்றன. விசா பல தடவைகள் புதுப்பிக்கப்பட்டன. ஆறு மாதகாலம் அங்கு தங்கினோம். ஸ்பானிஷ் பாஷையையும் கற்க ஆரம்பித்தோம். சுவாமிஜியின் பேச்சுகள் ஸ்பானிஷ் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. கத்தோலிக்க சமயத்தின் கோட்டைகள் பல இடங்களிலும் தென்பட்டபோதும் பல இடங்களிலும் நல்ல கூட்டங்கள். சுவாமிஜியின் விளக்கங்களுக்கு நல்ல ஆதரவு இருந்தது. பல கிறிஸ்தவ மடங்களிலும், சிறைச்சாலைகளிலும், கூட்டங்கள் நடைபெற்றன. சில இடங்களில் திரளான மக்கள் கூடினார்கள். அன்பர்கள் நல்ல விளம்பரமும் செய்தார்கள். சில அன்பர்கள் பஜனையையும் விரும்பினார்கள். சிலநாம பஜனைகளை திரும்பச்சேர்ந்து சொல்லுவார்கள்.

மெக்ஸிகோ நகரிலிருந்து புறப்படும் சமயம் வந்ததும் ஓர் அன்பரின் காரில் 1500 மைலுக்கு மேல் பிரயாணம் செய்தோம். இரண்டு வாரங்களாயின. வேறு வழியில் பல நகரங்களில் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த யாத்திரை முடிய இன்னும் எவ்வளவு காலம் செல்லுமோ தெரியவில்லை. அது என் கையில் இல்லை. 'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே. பாடுவித்தால் யார் ஒருவர் பாடாதாரே' என்ற அப்பர் சுவாமிகளின் வாக்குத்தான் நினைவு வருகிறது. ராமலிங்க சுவாமிகளும், 'பாடுவித்தால் பாடுகின்றேன், பணிவித்தால் பணிகின்றேன், பதியே, நின்னைக் கூட்டுவித்தால் கூடுகின்றேன், குழைவித்தால் குழைகின்றேன், குறித்த ஊணை ஊட்டுவித்தால் உண்ணுகின்றேன், உறங்குவித்தால் உறங்குகின்றேன், உறங்காதென்றும் ஆட்டுவித்தால் ஆடுகின்றேன், அந்தோ இச்சிறியேனால் ஆவதென்னே!'

'சிறியேனாலாவது என்னே' என்ற சொற்களும், இப்பாட்டும் எனக்கும் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

கலிபோர்னியாவில் இருக்கையில் 4 வேதாந்த சபைகளுக்கும், கோவில்களுக்கும் சென்றோம். இதில் சில சுவாமி விவேகானந்தரால் ஸ்தாபிக்கப்பெற்றன. அமெரிக்காவுக்கு இந்தியாவிலிருந்து முதல் முதலாக வேதாந்தக் கருத்துக்களைக் கொண்டுசென்ற ஞானியவரே அவர். அந்த மேலான பணியை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து சுவாமிகள் தொடர்ந்து செய்துவருகின்றார்கள். ஜனவரி மாதத்தில் மெக்ஸிகோவில் சுவாமி ரங்கநாதானந்தஜியைத் தரிசித்தோம். அவர் அங்கு சுமார் ஒருவாரம் பிரசங்கமாரி பொழிந்தார்கள்.

[மெக்ஸிகோ இந்தியர்களைப்பற்றிய விபரங்கள் அடுத்த வார இதழில் வெளிவரும்.]

ஈழநாடு

பரிதாபி வருடம் சித்திரை மாதம் 18-ம் திகதி (30—4—72)

## நமது கலைஞர்கள்

நமது கலைஞர்களில் பலர் இன்று ஆதரிப்பாரின்றி, வாழ்க்கை நடத்தவே முடியாமல் தவிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அவர்களது கலைச் செல்வங்களை மக்கள் ரசித்துப் பயன்பெற சந்தர்ப்பங்கள் இல்லாமல் இருப்பதும் இரட்டிப்பு நஷ்டமாகும்.

தமிழ் மன்னர்களின் ஆட்சி நடக்கையில், கலைஞர்களுக்கு மான்யங்கள் அளித்தும், பரிசில்கள் வழங்கியும் கலையைப் போற்றி வளர்த்தார்கள். ஆனால் மன்னர்கள் ஆட்சிமுடிந்து நாடு அந்நியர்களுக்கு அடிமைப்பட்டதும், தமது கலைப்பயிர்களும் நீர் வார்ப்பாரின்றி வாடிவிட்டன.

நாம் விடுதலை அடைந்தபின் நம் கலைஞர்களுக்கும் கலைகளுக்கும் நல்ல காலம் பிறக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஏமாற்றம்தான் கண்டபலன்.

அக்காலத்தில் கோவில்கள் கலைக்கூடங்களாக விளங்கின. டிக்கெட் கட்டணங்கள் இல்லை. அதனால் பொதுமக்கள் ஏராளமாக ரசித்தனர். கோவில்களில் ஒவ்வொரு நாளும் ஒரு கலைநிகழ்ச்சி இருக்கும். அது நின்றுவிட்டதால் இன்று கோவிலுக்குச் செல்பவர்கள் குறைந்தும் போயினர்.

அரசாங்கம் கலைஞர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும். அதற்கிடையே தமது கோவில்களை நடத்துபவர்கள் ஒவ்வொரு நாளும் இல்லாவிடினும் வாரம் ஒரு நாளாவது ஒரு கலைநிகழ்ச்சிக்கு பொதுமக்களின் ஒத்துழைப்புடன் செய்வதாயின் அது பலவிதங்களிலும் நன்மைபயக்கும்.

கலைஞர்கள்தான் நாட்டின், சமூகத்தின் அரும் செல்வம். அச்செல்வத்தை வளர்க்கக் கடுமையாக செய்வதுடன், அதைத்தக்கபடி பயன்படுத்தினால்தான் அதனால் நமக்கு நன்மை ஏற்படமுடியும்.

## அறிவித்தல்

"ஈழநாடு" மலையக பிரதிநிதியாக திரு. இராமச்சந்திரன் அவர்களை நியமித்துள்ளோம். மலையகப் பகுதி ஏஜண்டுகள் சந்தா, விளம்பரம், ஓடர்கள் ஆகியவற்றிற்கு பின்வரும் விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும்.

நா. இராமச்சந்திரன்
நம்: 8 பிரதான வீதி
தலவாக்கொல்லை

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.